
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
16-9-1973
40 காசு



வாழ்வே ஒரு பாச உலகம்




'க்ளிக்' அடித்துவைப்பீர்...நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III,
மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக்
காப்பீர் நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக், காரியத் தகுதி
வாய்ந்தது, உண்மை தவறாதது.
கையாள எளிது, சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

விலை ரூ. 56.25 (எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி)



தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும்,
என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர்
ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.
அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும்
கிடைக்கும்.
ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு
இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.


AGIL

ஏகபோக வினியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான
ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன்
ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

Agfa

ஆக்பா க்ளிக் —
இந்தியாவின் உன்னதப்
புகழ்பெற்ற காமிரா.

Simoes/AG/17 b/Tam



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்



கோகுலம்

மலர் 2 : இதழ் 12

செப்டம்பர் 16, 1973

பிரமாதீச, ஆவணி 31

சந்தா விவரம் :

தனிப் பிரதி 40 காசு

உள் நாடு :

ஒரு வருடம் ரூ. 10–00

ஆறு மாதம் ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00

(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்


கல்கிப் பூங்கா, சென்னை-600031

அட்டையில் :

" ஆடும் குதிரை பாருங்க
போடும் ஆட்டம் ஜோருதான்!

வண்ணப்படம் :

எஸ். அஸத்



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

இராவணனுக்கு அருளியது

புலத்தியருடைய புதல்வர் விச்சிரவசு முனிவர். இவர் சிறந்த மகிமையுள்ளவர். இம்முனிவருக்கும் கேகசி என்ற அரக்கிக்கும் பிறந்தவன் இராவணன்.

கொடுமையே ஒரு வடிவானவன். இவனுக்குப் பாவம் என்றால் பால் பாயசம். அக்கிரமம் என்றால் அதிரசம். காமாதுரனாக வாழ்ந்தான். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங் கொடுமைகள் செய்து கொடுங் கோலனாய் இலங்காபுரியை அரசு புரிந்து வந்தான். நல்லவர்கள் சுகமாக இரா வண்ணம் செய்து, இரா வண்ணமான உடம்புடன் இருந்தான். முள்ளுக்கு இடையே மலர் இருப்பது போல் இவனுடைய கொடுமைகளுக்கு இடையே சிவ பக்தி இருந்தது.

இராவணன் ஒரு சமயம் திருக் கயிலாய மலைக்குச் சென்று பரமேசுவரனைப் பணிந்தான்.

''ஐயனே! ஆலமுண்ட மணி கண்டனே! அடியேன் நித்திய வழிபாடு செய்ய ஆத்தும லிங்கம் ஒன்று தந்தருளும்'' என்று வேண்டினான். வேண்டியவர்க்கு வேண்டியவற்றை வேண்டிய வண்ணம் வழங்கும் வள்ளல் சிவபெருமான் அவனுக்கு ஆத்ம லிங்கத்தை அளித்தருளினார். சிவபெருமான் ''அப்பா ராவணா! இந்தச் சிவலிங்கத்தை இலங்காபுரியில் வைத்தால் இலங்காபுரி என்றும் அழியாது, ஓங்கி நிற்கும். இதனை இலங்காபுரிக்குக் கொண்டு செல்லுவாயாக. இடையில் எங்கும் வைக்கக் கூடாது. வைத்தால் திரும்ப எடுக்க முடியாது'' என்று கூறினார்.

இராவணன் ஆத்ம லிங்கத்தைக் கையில் ஏந்திக் கொண்டு இலங்காபுரியை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இந்திராதி இமையவர்கள் இதனையறிந்து நடுங்கினார்கள். ''இந்த ஆத்ம லிங்கம் இலங்காபுரியில் வைக்கப் பெற்றால் இராவணனும் இலங்காபுரியும் அழிய முடியாதே. உலகங்கட்குப் பெருந் தீங்கு விளையுமே? நாம் என் செய்வோம்?'' என்று எண்ணி எண்ணி ஏங்கினார்கள். எல்லோரும் பிரமதேவரிடம் முறையிட்டார்கள். பிரமதேவர் திருமாலிடம் கூறி முறையிட்டார்.

அரவணையில் அறிதுயில் புரியும் அரி முகுந்தனார் ''இதற்கு நாம் செய்யத் தக்கது யாது?'' என்று சிறிது சிந்தித்தார். அடியார்களின் இடர்களைக் களையும் விநாயகப் பெருமானை வழிபட்டால் இந்த இடர் நீங்கும் என்று கருதி முடிவு செய்தார்.

திருமாலும் திசைமுகன் முதலிய தேவர்களும் விநாயகப் பெருமானை வேண்டித் துதி செய்வாராயினர்.

''கஜானனக் கடவுளே! கருணையங் கடலே! அடியவர் இடர் களையும் ஐந்து கரத்து அண்ணலே! கொடியவனாகிய இராவணன் திருக்கயிலாய மலையில் சிவ பெருமானிடமிருந்து ஆத்ம லிங்கம் பெற்றுக் கொண்டு இலங்காபுரி நோக்கிப் போகிறான். அந்த லிங்கம் அங்கு சென்றால் இலங்காபுரி அழியாது. எம் பெருமானே! இந்த வேளையில் நீர் அருள் புரிய வேண்டும்'' என்று கூறி முறையிட்டார்கள்.

விநாயகப் பெருமான் அவர்கள் முன் தோன்றி அருளினார்.

''மாலயனாதி வானவர்களே! நீங்கள் வருந்த வேண்டா. நாம் அருள் புரிவோம்'' என்று கூறிக் கருணை புரிந்தார்.



இராவணன் வயிற்றிலே ஏழு நதிகளை யும் பெருகுமாறு விநாயகர் கட்டளை யிட்டருளினார். இராவணனுடைய வயிற் றில் நீர் நிரம்பி வயிறு முட்டித் துன்ப முற்றான். சிவலிங்கத்தைக் கையில் வைத்துக் கொண்டு சிறுநீர் கழிக்கக் கூடாது. சிவலிங்கத்தைக் கீழேயும் வைக்கக் கூடாது. என் செய்வான்? திண்டாடினான்.

அங்கே விநாயகர் ஒரு சிறிய வேதியச் சிறுவனைப் போல் வந்தார். இராவணன் ''அப்பா, மறைச் சிறுவனே! இந்த லிங் கத்தை வைத்துக் கொள். நான் சிறுநீர் கழித்துவிட்டு வந்து வாங்கிக்கொள்ளு கிறேன்'' என்றான்.

வேதியச் சிறுவன், ''ஐயா! நான் பள்ளிக்குப் போகிறேன். அதிக நேரம் தாமதிக்க முடியாது'' என்றான்.

இராவணன் ''சிறுநீர் கழிக்க அதிக நேரம் ஆகாது. விரைவில் வந்துவிடு வேன்'' என்றான்.

வேதியச் சிறுவன், ''மூன்று முறை அழைப்பேன். அதற்குள் வர வில்லையானால் லிங்கத்தை நிலத்தில் வைத்து விடு வேன்'' என்றான்.

'சரி' என்று கூறி இரா வணன் சிவலிங்கத்தை அச்சிறுவனின் கையில் கொடுத்துவிட்டு, ஒரு புறம் சிறுநீர் கழிக்க அமர்ந்தான். சிறுநீர் பெருகிக் கொண்டே யிருந்தது. அதை நிறுத்த முடியாது அல் லல் உற்றான்.

அந்தணச் சிறுவன், ''ஏ பத்துத்தலையனே! ஒரு முறை! ஏ பத்துத் தலையனே! இரண்டு முறை! ஏ பத்துத் தலையனே! மூன்று முறை'' என்று கூறிவிட்டுக் கீழே வைத்து விட்டார். இராவணனுக்குச் சிறுநீர் நின்று விட்டது. அவன் நீராடி விட்டு வந்து அச் சிறுவனைப் பார்த்து வெகுண்டான். அச் சிறுவன் தலையில் ஓங்கிக் குட்டினான்.

இலிங்கத்தை எடுக்க முயன்றான். அது எழவில்லை. இருபது கரங்களாலும் வலிந்து எடுக்கலானான். அச்சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்து விட்டது. மிக்க வருத்தத்துடன் வெறுங் கையுடன் அவன் இலங்காபுரி சேர்ந்தான்.

பசுவின் காதுபோல் குழைந்தபடி யால் ''கோகர்ணம்'' எனப் பேர் பெற்றது. இராவணனால் எடுக்க முடி யாமையால் மஹா பலேச்சுரர் எனப் பெற்றார். மேற்குக் கடற்கரையில் இன் றும் பூலோக கைலாயமாக விளங்கு கின்றது கோகர்ணம்.


அங்குள்ள விநாயகருடைய தலையில் காற்படி சந்தனம் பிடிக்கும் அளவில் குழியுள்ளது. இத்தலம் மிகவும் புனித மானது.

கால்களால் பயன் என்?
கறைகண்டன் உறைகோயில்
கோல கோபுர கோகரணம்
சூழாக்கால்களால் பயன் என்?

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

இராவணனுக்கு விநாயகர் காட்சி தந்து, ''நீ வருந்தாதே! இச் சிவலிங்கம் இங்கேயே விளங்குவதாக'' என்று கூறி அருளினார்.

(தொடரும்)







யுரேனியம்

யுரேனியம் உலகில் பன்னெடுங் காலமாக இருந்து வரும் ஓர் உலோகம். ஆனால் மனிதன் அதைப் பற்றி அறிந்தது சமீபத்தில்தான். யுரேனியம் ஓர் உலோகத் தாதுப்பொருள். மிக மிகக் கடினமானதும்கூட. வெள்ளி, பாதரஸம் இவைகளையெல்லாம்விட இலகுவாகப் பூமியின் மேல் பரப்பிலேயே இந்தத் தாது கிடைக்கிறது.

கலப்படமற்ற சுத்தமான யுரேனியம் வெள்ளியைப் போலவே பளபளப்பாக இருக்கும். ஆனால் சில நிமிஷங்கள் இதைக் காற்றுப் படும்படி வைத்திருந்தால் இதன் மேல்பரப்பு ஒளி குன்றிச் செம்பழுப்பு நிறமாகிவிடும். யுரேனியம் காற்றிலுள்ள பிராணவாயுடன் வெகு விரைவில் கலப்பதே இதற்குக் காரணம். இந்தச் செம்பழுப்பு நிறப் போர்வை தன் கீழுள்ள மூல உலோகத்துக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. மற்ற உலோகங்களுக்கும், யுரேனியத்துக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம்; யுரேனியத்துக்கு இயற்கையாகவே கதிர் இயக்கம் (ரேடியோ ஆக்டிவிடி) உண்டு. அதாவது யுரேனியத்தின் அணுக்களிலிருந்து சில வகைக் கதிர்கள் வெளிப்படுகின்றன. இந்தக் கதிர்களுக்கு 'ஆல்ஃபா, பீட்டா, காமா' என்று பெயர். இப்படி யுரேனியத்திலிருந்து வெளிப்படும் கதிர்கள் தனிப்பட்ட நிலையில் கதிர் இயக்கம் கொண்டவைகளாக இருக்கின்றன. இப்படிச் சங்கிலித் தொடர் போல் இவ்வுலோகத்தின் கதிர் இயக்கம் வளர்ந்து கொண்டே போவதுதான் இதன் விசேஷ குணம். இக்கதிரியக்கத்தின் வட்டத்தில் பதினான்கு நிலைகள் உள்ளன. ஒரு நிலையில் யுரேனியம், ரேடியம் என்ற உலோகத்தை உற்பத்தி செய்கிறது. கடைசி நிலையில் உற்பத்தி செய்வது ஈயம். இத்துடன் இந்தத்தொடர் முற்றுப்பெறுகிறது. ஏனென்றால் ஈயத்துக்கு 'ரேடியோ ஆக்டிவிடி' குணம் கிடையாது. இயற்கையாக யுரேனியம் ஈயமாக மாறுவதற்குப் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாகும்.

சிலேட் என்றால் என்ன?

'ஸ்லேட்' என்றதும் தம்பிப் பாப்பா மாதம் ஒன்றாக உடைக்கும் எழுது பலகையின் நினைவுதான் உங்களுக்கு வரும். இந்தக் கரும் பலகை எப்படி உண்டாகிறது? பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் மிக நுண்ணிய களிமண், ஏரிகளின் அடியிலும் பெரிய நதிப் படுகைகளிலும் உள்நாட்டுக் கடல் பகுதிகளிலும் பல படிவங்களாகப் படிந்து மிருதுவான சேறு ஆகி இருக்கும். பின்னால் இது கெட்டிப்பட்டுச் சேற்றுப் பாறையாகி யிருக்கும். இதற்கு ஷேல் (Shale) என்று பெயர்.


இந்தக் காலத்தில் பூமியின் மேல் பாகம் இடம் பெயர்ந்து நகர்ந்திருக்கும். ஷேல்களின் அடுக்குகளை மூடி இருக்கும் மண் பாறைகளும் நகரும்போது ஷேலில் மடிப்புகளும் சுருக்கங்களும் ஏற்படும். இந்தச் சுருக்கங்கள் பாறைகளின் அழுத்தத்தினால் சமமாக்கப்பட்டு ஷேல்—ஸ்லேட்டாக மாறுகிறது. ஸ்லேட்டின் படிவங்கள், ஏரி, கடல் இவைகளின் களிமண் துகள்கள் படிப்படியாகப் படிவதினால் ஏற்பட்டவைதான். ஷேல் ஸ்லேட்டாவதற்கான அழுத்தம் மாறிய பிறகும்கூட ஸ்லேட்டில் அதன் அடுக்கடுக்கான படிவுகள் தனித்தனியாகவே இருக்கும். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்லேட்டுப் படிவங்களை (பாறைகளை) உடைக்கும்போதும் அவைகளைப் பாளம் பாளமாகவே எடுக்கலாம்.

ஸ்லேட்டின் பொதுவான நிறம் ஆழ்ந்த சாம்பல் அல்லது கறுப்புவண்ணம். ஆனாலும் சிவப்பு, பச்சை, பல வண்ண கீரே இப்படியாகவும் ஸ்லேட்டுக்கள் உண்டு. அநேகமாக அது கறுப்பாக இருப்பதற்குக் காரணம் அது ஸ்லேட்டாக மாறுமுன் இருந்த சேற்றில் கார்பன் பொருள்கள் மிகுதியாக இருந்திருப்பதே காரணம்.

ஷேலின் மீது பாறைகளின் அழுத்தம் எங்கு ஏற்படுகிறதோ அங்கு மட்டுமே ஸ்லேட்டுக்கள் கிடைக்கின்றன.

ஸ்லேட்டின் உபயோகம்—நீங்கள் எழுதுபலகைகளாக உபயோகிப்பது மட்டும்தான் என்று நினைக்கிறீர்களா? இல்லை. மேலை நாடுகளில். வீட்டுக்குக் கூரையாகப் பயன்படுகிறது. இந்த ஸ்லேட்டு மேஜையின் மேல் பகுதியாகவும், பள்ளிகளில் கரும் பலகையாகவும் பயன்படுகிறது.







பற்களைப் பற்றி

மனிதனுக்கு அவன் வாழ்வில் இரண்டு காலகட்டங்களில் பற்கள் முளைக்கின்றன. முதலில் முளைக்கும் பற்களுக்குக் குழந்தைப் பற்கள் (பிரைமரி) என்று பெயர். இரண்டாவதாக முளைப்பவை நிரந்தரமான பற்கள். பூரணமாக வளர்ந்துவிட்ட பற்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு வகைக்கும் ஒரு விசேஷமான வேலை உண்டு.

வாயின் முன்னால் — பல் வரிசையின் நடுவில் — இருப்பவை உணவை வெட்டித் துண்டாடுகிறது. இவைகளுக்கு இன்ஸிஸர்ஸ் (உளிப் பற்கள்) என்று பெயர். இந்த இன்ஸிஸர்களுக்கு இரு பக்கமும் உள்ள பற்களுக்கு கஸ்பிட்ஸ் (கோரைப் பற்கள்) என்று பெயர். இவை உணவுப் பொருள்களைக் கிழிக்க உதவுகின்றன. கஸ்பிட்ஸ்களை அடுத்து உள்ளவைகளுக்கு பை கஸ்பிட்ஸ் என்று பெயர். இவை உணவுப் பொருள்களைக் கிழிக்கவும் அரைக்கவும் உதவுபவை. கோடியில் இருப்பவை மோலார்கள். அரைக்கும் பற்கள் இவைதான்.

முதல் நிலையில் மொத்தம் இருபது பற்கள் தோன்றும், தாடைக்குப் பத்து வீதம். குழந்தை பிறப்பதற்கு முப்பது வாரங்களுக்கு முன்பே இந்தப் பற்களுக்கான தோற்றம் உருவாகிவிடுமாம். அநேகமாகக் குழந்தைகளுக்கு முதன்முதலில் கீழ் வரிசையில்தான் இன்ஸிஸர்கள் தோன்றும். ஆறிலிருந்து முப்பது மாதங்களுக்குள் குழந்தைப் பற்கள் எல்லாமே முளைத்துவிடும். இவை ஒவ்வொரு வரிசையிலும் நான்கு உளிப் பற்கள், இரண்டு கோரைப் பற்கள் நான்கு அரைக்கும்' பற்கள் வீதம் இருக்கும்.

நிரந்தரமான 32 பற்களில் 28 பற்கள், ஆறு வயதிலிருந்து பதினாறு வயதுக்குள் முளைத்துவிடும். மற்ற நான்குமான ஞானப் பற்கள் (கடைவாய்ப் பற்கள்) பதினேழிலிருந்து இருபத்தியொரு வயதுக்குள் தோன்றும். நிரந்தரமான பற்களில் ஒவ்வொரு வரிசையிலும் நான்கு உளிப் பற்கள், இரண்டு கோரைப் பற்கள், நான்கு அரைக்கும் பற்கள், ஆறு கடைவாய்ப் பற்கள் இருக்கும். கடைவாய்ப் பற்கள் வயது ஆக ஆகத் தாடை நீளும்போது, குழந்தைப் பற்களுக்குப் பின்னால்தான் முளைக்கும். கடைவாய்ப் பற்கள்தான் பற்களின் அமைப்பிலேயே முக்கியமானவை.

மிகப் பெரிய தாவரம்


உலகிலுள்ள மிகப் பெரிய தாவரம் ஒரு மரம். இந்த மரம் கலிபோர்னியாவில் வளருகிறது. உலகின் மிகப் பெரிய மரம் மட்டுமல்லாமல் உலகின் மிக மிகப் பழைமையான மரமும் கூட. இதற்குச் செகோயா மரம் என்று பெயர்.

இந்த மரம் சர்வசாதாரணமாக 350 அடிகள் உயரம்வரை வளரும். 1968ம் ஆண்டுக் கணக்குப்படி ஒரு மரத்தின் உயரம் 367.8 அடிகள். அதாவது நல்ல உயரமான 53 மனிதர்கள் ஒருவர் மேல் ஒருவர் நின்றால் எவ்வளவு உயரமோ அத்தனை. இந்தப் பெரிய மரத்தின் சுற்றளவு நூறு அடிகளுக்கு மேல் இருக்கும். ஐயாயிரம் வருஷங்கள் வரை வாழக் கூடிய மரங்களாம் இவைகள். இரண்டிலிருந்து மூன்று ஆயிரம் வருடங்களுடைய மரங்கள் இன்றும் இங்கு காணப்படுகின்றன. மரங்களின் வயதை எப்படிக் கணக்கிடுவது? மரத்தை வெட்டினால் அதன் நடு மையத்திலிருந்து வரிசையாகக் காணப்படும் வட்டமான வளையங்களை (ரேகைகள்) கொண்டு அவைகளின் வயதைக் கூறிவிடலாம். செகோயா மரங்களில் இம்மாதிரியான வட்டக் கோடுகள் இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் வரையில் காணப்படுகின்றன. இந்த மரத்தின் குறுக்களவு 34 அடிகள். 6,00,120-போர்டு அடி பலகைகளை ஒரு மரத்திலிருந்து பெறமுடியும். அதாவது ஐந்து அறைகளைக் கொண்ட நாற்பது பங்களாக்களை இந்த ஒரு மரத்தினால் கட்டிவிடலாமாம். இதன் ஆழ்ந்த காவி வண்ணமான பட்டையின் கனம் 24 அங்குலங்கள். இலைகள் கரும் பசுமை நிறமானவை.

1931ம் ஆண்டுக் கணக்குப்படி ஒரு செகோயா மரத்தின் கனபரிமாணம் 49,660 கன அடிகள் — பட்டையையும் உச்சியையும் சேர்த்து. ஒரு கன அடியின் சராசரி நிறை 48 பவுண்டுகள். மரத்தின் மொத்த நிறை 1915 டன்கள். இவை பூமிக்கு மேலே உள்ள பாகத்தின் கணக்குகள் மட்டுமே. பூமிக்குள் அதன் வேர்ப் பகுதி? இத்தனை பெரிய மரத்துக்கு எத்தனை ஆழமானவேர்ப்பிடிப்புகள் இருக்க வேண்டும்? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன்.



இப்போது உடைபடும் இவர் உருவை நீங்கள் படைத்து வணங்குங்கள்! — தாணு



அடுத்த இதழில் யார்?

எப்போ வருவாரோ ?


வீலாவின் கதையைப் படிக்கும் நீங்கள் டைகரின் அன்பையும் சாகசத்தையும், விசுவாசத்தையும் கண்டு வியந்து மகிழ்ந்து போகிறீர்கள் இல்லையா? அது கதைதான், கற்பனைதான். ஆனால் அந்தக் கற்பனை எப்படி வந்தது? நாயினுடைய அற்புதமான குணங்களைப் பற்றிய பல உண்மைச் சம்பவங்களைக் கொண்டு உருவானதுதான் இத்தகைய கற்பனைகள். இதோ ஓர் அற்புதமான நாயினுடைய உண்மைக் கதையைப் பாருங்கள்.

1936ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒரு நாள் பகல் பொழுது. அமெரிக்காவிலுள்ள மாண்டானா மாகாணத்தில் ஃபோர்ட் பெண்டன் என்று ஒரு சின்னஞ்சிறு ஸ்டேஷன். அங்கு ஒரு ரயில் வண்டி வந்து நின்றது. இது அங்குள்ள எல்லோருக்குமே ஒரு வழக்கமான நிகழ்ச்சிதான். இதில் பரபரப்புக்கோ பதற்றத்துக்கோ ஏதுமில்லை ஒரே ஒரு நாயைத் தவிர. பிரயாணிகள் ஏறினார்கள், இறங்கினார்கள். தபால்கள், சாமான்கள் பரிவர்த்தனை" நடந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் ரயில்வே கார்டிடம் ரசீதுகளைக் கொடுத்தார்; பெற்றுக் கொண்டார்.

ஆனால் அந்தப் பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு நாய்க்கு மட்டும் அந்த வண்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. செம்பழுப்பும் வெளுப்பும் கலந்த அழகான நாய் அது. 'கூலி' என்ற வகையைச் சேர்ந்தது. ஆடு மேய்ப்பவர்கள் விரும்பி வளர்க்கும் ஒரு வகை நாய். ஆடுகள் சிதறி ஓடி விடாமல் கட்டிக் காத்து மேய்த்து வருவதில் இவ்வகைக் கூலி நாய்கள் திறமையுடையவை. பார்வைக்கு அல்சேஷன் போலவே இருக்கும்.

அந்த நாய் ரயில்வே பிளாட்பாரத்தில் சோகமே வடிவாக உட்கார்ந்திருந்தது. சாமான் வண்டியில் போர்ட்டர்கள் ஒரு சவப் பெட்டியை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது அந்த நாய். அந்தப் பெட்டிக்குள் அதனுடைய எஜமானன் இருந்தார். ஆடு மேய்க்கும் தொழிலுடைய அவருடைய நாய்தான் அது. திடீரென்று இறந்துபோன அவரை அடக்கம் செய்ய வேறு எங்கோ அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இதெல்லாம் பாவம் அந்தப் பேச முடியாத பிறவிக்குத் தெரியுமா? அந்தப் பெட்டிக்குள் தன் எஜமானனைக் கிடத்தியதை மட்டுமே அது பார்த்தது. எங்கோ போகிறார் என்று எண்ணியது. பெட்டி ஸ்டேஷனுக்கு வந்தபோது அதுவும் கூடவே வந்தது.

சவப் பெட்டியுடன் ரயில் வண்டி நீராவியைக் கக்கியபடி பெருமூச்சுடன் ஸ்டேஷனை விட்டு நகர்ந்ததும் அநாதையாகி விட்ட அந்த நாய் கொஞ்ச தூரம் வண்டியோடு ஓடியது- பிளாட்பாரத்தின் கோடி வரையில்... சிறிது நேரம் வேகமெடுத்துச் செல்லும் அந்த வண்டியையே பார்த்துக்கொண்டு நின்றது. பிறகு தள்ளாடியபடி திரும்பியது. அதன் காதுகளும் வாலும் தொய்ந்து விட்டன.. பிளாட்பாரத்தின் கோடிக்குப் போய்த் தரை மண்ணைக் கால்களால் பறித்து ஒதுக்கிக் குழி செய்து அதில் உட்கார்ந்து கொண்டது. பாசம் நிறைந்த, அன்பு கொண்ட



அதன் பளபளக்கும் விழிகள் ரயில் வண்டித் தடத்தையே வெறித்துப் பார்த்தபடி இருந்தன. அதன் நினைப்பில் 'எஜமானன் எங்கோ வெளியூர் போயிருக்கிறார், விரைவில் திரும்பி விடுவார், அதுவரை நாம் இங்கேயே காத்திருக்கவேண்டும்' - இந்த மாதிரிதான் எண்ணங்கள் ஓடியிருக்கும். எத்தனை நாட்கள் காத்திருப்பது? எத்தனை நாட்களானாலும் சரி.

ஒவ்வொரு நாளும் அந்த ஆதரவற்ற நாய் ஃபோர்ட் பெண்டன் ஸ்டேஷனுக்குள் ஒவ்வொரு வண்டி வந்ததும் தன் இருப்பிடத்திலிருந்து பரபரப்புடன் எழுந்து வரும். அவ்வோடு வண்டியிலிருந்து இறங்குபவர்களைப் பார்க்கும் அதில் தன் எஜமானர் இருக்கிறாரா என்று. வண்டியின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை வேகமாக ஓடும். ஆரம்பத்தில் யாரும் இந்த நாயிடம் அதிக நாட்டம் செலுத்தவில்லை. ஸ்டேஷன் சிப்பந்திகளும், பிரயாணிகளும் அது ஏதோ உதிரி நாய், இரண்டொரு நாளில் எங்காவது ஓடிவிடும் என்றுதான் எண்ணினார்கள். அவ்வழியாகப் போகும் வண்டிகளின் கண்டக்டரான எட் ஷீல்ட் என்பவரும் இப்படித்தான் எண்ணினார். ஆடு மேய்ப்பவராக வாழ்ந்து அங்கு காலமான ஒருவரின் சவப் பெட்டியைத் தன் வண்டியில் ஏற்றிய அன்று இதே நாய் அப்பெட்டியையே சோகம் ததும்பப் பார்த்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்ததும்தான் அவர் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். அதன் நிலைமை அவருக்குப் புரிந்து விட்டது. பெருமூச்சுடன் ''பாவம், திரும்பி வராத தன் எஜமானனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது'' என்றார்.

''ஆமாம், ரொம்பப் பரிதாபம்!'' என்றார் ஸ்டேஷன் மாஸ்டர். ''என்னைப் பொறுத்தவரை அது விரும்பும் வரை இந்த ஸ்டேஷனையே அது தன் வீடாக ஏற்று இங்கேயே வாழ்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அதற்கு வேண்டிய உணவுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். நாம் அதை 'ஷெப்' என்று அழைப்போம்.'' என்று ஒரு திட்டமே வகுத்து விட்டார் ஸ்டேஷன் மாஸ்டர்.

வாரங்கள் வந்து போயிற்று. வண்டிகளும்தான். ஷெப் வழக்கப்படி ஒரு வண்டி தவறாமல் தன் எஜமானனைத் தேடி அலைந்தது. வெகு தூரத்தில் இலேசாக ரயில் வண்டியின் ஜிகுஜிகு ஓசையோ, கூவலோ, மணியோசையோ கேட்டாலும் போதும். ஷெப் பிளாட்பாரத்துக்கு ஓடி வந்து தயாராக, நிமிர்ந்து நிற்கும் — வரும் வண்டியை வரவேற்க. வந்த வண்டி கிளம்பிச் சென்ற பிறகு உடல் துவளத் தள்ளாடியபடி தன் இருப்பிடத்துக்குப் போய் முடங்கிக் கொள்ளும். ஒரு வண்டி வந்து நின்று அதிலிருந்து பிரயாணிகள் இறங்கும்போது அதன் கண்களில்தான் எவ்வளவு நம்பிக்கை! மூச்சு வாங்கப் பரபரப்புடன் அங்கும் இங்கும் ஓடும். ஒவ்வொரு பிரயாணியையும் உற்றுப் பார்க்கும். அவர்களை மோப்பமிட்டும் பார்க்கும். வண்டியின் கண்டக்டரைக் கெஞ்சுவது போல நோக்கும். ''என்னுடைய எஜமானர் இந்த வண்டியில் வரவில்லையா? என்னவரை நீ பார்த்தாயா?'' என்று வினவுவது போலிருக்கும் அந்தப் பார்வை. வண்டி போனதும் அந்தத் தடத்திலேயே தண்டவாளங்களின் இடையே கொஞ்ச தூரம் போகும். பிறகு தள்ளாடியபடியே திரும்பி வந்து தன் குழிக்குள் போய் முடங்கிக் கொண்டு தனிமையான காவலைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

மாதங்கள் உருண்டன. ஃபோர்ட் பெண்டனில் உள்ள எல்லாரும் அந்த நாய் ஷெப்பைப் பற்றி அறிந்தார்கள். பரிதாபம் கொண்டார்கள். அதனுடன் நட்புக் கொள்ள முயன்றார்கள். பிரயாணிகள் அதை அன்போடு தடவிக் கொடுத்தார்கள். சிறுவர், சிறுமியர் அதைக் குரைக்கச் செய்து தங்களைத் துரத்தும்படி வேண்டி விளையாடினார்கள். ஷெப் எல்லோரிடமும் நட்போடு பழகியது. ஆனால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் அது யாரையும் அனுமதிப்பதில்லை. இதனால் ஷெப்பை முகடு என்றோ, வெறி பிடித்தது என்றோ கூற முடியாது. கர்வமும், கம்பீரமும் தன்மானமும் நிறைந்த நாய் அது. தன்னைத் தொட்டு ஷொட்டுக் கொடுத்து அணைத்து மகிழ ஸ்டேஷன் மாஸ்டரையும் ரயில் கண்டக்டரையும் மட்டுமே அது அனுமதித்தது. பிறர் யாரும் தன்னைத் தொடுவதை விரும்பாத நாய் அது. ரயில் கண்டக்டரான ஷீல்டுக்கு அதன் குணம் புரிந்து விட்டது. ''ஷெப் ஒரு தனி மனிதனுடைய நாய். அது தன் எஜமானன் ஒருவரிடம் மட்டுமே அன்பும் ஈடுபாடும் உடையது'' என்றார்.

ஒரு வருஷத்துக்குள் ஷெப்பினுடைய கதை — நன்றி மிக்க அந்த நாயின் எஜமான விசுவாசம் — நகரத்துக்கு நகரம், மாகாணத்துக்கு மாகாணம் பரவி வெளி நாடுகளுக்கும் போயிற்று. நூற்றுக் கணக்கானவர் கார்களில் ராக்கி மலைகளைக் கடந்து அந்த அற்புத நாய் ஷெப்பைக் காண வந்தார்கள். அதைப்

படம் பிடித்துக் கொண்டு போனார்கள். ஃபோர்ட் பென்டன் வழியாகச் செல்லும் ரயில் பிரயாணிகள் அந்த ஸ்டேஷன் எப்போது வரும் என்று காத்திருந்து ஜன்னல் வழியாக, ஆவலோடு தலையை நீட்டி அதை ஒரு முறை காணத் துடித்தார்கள். இன்னும் சொல்லப் போனால் வேறு மார்க்கமாகப் போக வேண்டியவர்கள் இந்தப் புகழ்பெற்ற ஷெப்பைக் காணத் தங்கள் பிரயாணத் திட்டத்தை மாற்றிக் கொண்டு இந்த ஸ்டேஷனுக்கு வந்து இந்த நாயைப் பார்த்துப் போனவர்களும் உண்டு.


ஷெப்பைப் பற்றிய செய்திகள் கதை கதையாக எங்கெங்கும் பரவலாயிற்று. சின்னப் பத்திரிகைகள், பிரபலமான தினசரிகள் எல்லாமே அதிசய நாய் ஷெப்பைப் பற்றிய செய்திகளைத் தாங்கி வெளிவந்தன. கானடா, அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் விசுவாசம் மிக்க ஷெப்பின் படமும் கதையும் வராத பத்திரிகைகளே கிடையாது. இத்தனை விளம்பரம் கிடைத்ததும் அந்த நாய்க்குத் தாங்கள் புகலிடம் தந்து போற்றிப் பாதுகாப்பதாகக் கூறி ஏராளமான கடிதங்கள் ஃபோர்ட் பென்டன் நகருக்கு வந்து குவியலாயின. ஆண், பெண், குழந்தைகள், பணக்காரர்கள் எல்லோரும் அதைத் தங்களதாக்கிக் கொள்ளப் போட்டி போட்டார்கள். நாய் வளர்ப்புக் கழகங்கள் அதைத் தங்களிடம் விடும்படி கேட்டுக் கொண்டன. ஆடு மேய்ப்பவர்களில் அநேகர் மான்டானா, யோமாங், தெற்கு டகோடா ஆகிய பகுதிகளிலிருந்து அதற்கு வீடும் வாழ்வும் தாங்கள் தருவதாக முன் வந்தார்கள். இத்தனை வேண்டுகோளுக்கும் ஸ்டேஷன் மாஸ்டரும் கண்டக்டரும் கூறிய ஒரே பதில் ''ஷெப்பை நாங்கள் வற்புறுத்த மாட்டோம். அதன் விருப்பம் எதுவோ அதன்படி அது நடக்கட்டும்.'' ஷெப் தன்னுடைய வழியில் தன்னுடைய முடிவைத் தெரிவித்தது. ''என்னுடைய எஜமானருக்காக நான் இங்கேயே காத்திருப்பேன்!''

உலகிலேயே மிகப் புகழ் பெற்ற நாயாகி விட்டது ஷெப். ஒவ்வொரு நாளும் அதற்கு வரும் கடிதங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போயிற்று. உலகின் பல பகுதிகளிலிருந்தும் கடிதங்கள் வந்து குவியலாயின. அதன் பராமரிப்புக்குப் பலர் பணம் அனுப்பினார்கள். ஏராளமானவர்கள் அதன் புகைப்படம் கேட்டு எழுதினார்கள். வேறு சிலர் அதை எப்படி எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்று யோசனைகளைக் கூறினார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டரினால் இத்தனை கடிதங்களையும் சமாளிக்க முடியவில்லை... ரயில்வே நிர்வாக சூபரிண்டெண்டு ஷெப்புக்கு வரும் கடிதங்களை நிர்வகிக்க ஒரு காரியதரிசியை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். உலக சரித்திரத்திலேயே தனக்கு ஓர் அந்தரங்கக் காரியதரிசியை நியமித்துக் கொண்ட நாய் ஷெப்பாகத்தான் இருக்க வேண்டும்!

மக்களின் அன்பும், அரவணைப்பும், அனுதாபமும் ஷெப்பை இந்த வருஷங்களில் அதிகமாக மாற்றிவிடவில்லை. கொஞ்சம் பருத்து வயதாகிவிட்டிருந்தது. அவ்வளவுதான். கண்ணில் இருந்த பழைய ஒளி இல்லை. உன்னிப்பாகக் கேட்கும் காதுகளும் கொஞ்சம் சக்தி இழந்திருந்தன. நிழலைப்போல் நிதானமாக நடந்தது. ஆனாலும் மழையோ, பனியோ, கோடையோ, மாரியோ அந்த ஸ்டேஷனுக்கு வரும் ஒரு வண்டியையும் அது தவறவிடுவதில்லை. தனது முடிவற்ற தேடுதலைத் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஐந்தரை ஆண்டுகள் ஓடிவிட்டன. ஷெப் தன் எஜமானரின் வரவை எதிர்பார்த்து இன்னமும் காத்துக் கொண்டிருந்தது.

1942ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ந் தேதி அதிகாலை. ஃபோர்ட் பென்டன்



ரயில் நிலையத்திலும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் இலேசாகப் பனி உதிர்ந்து கொண்டிருந்தது. பிளாட்பாரம் ரயில் வண்டித் தடம் எங்கும் வழுக்கிவிடும் நசநசப்பு. காலை 10.17க்கு வரவேண்டிய வண்டி தூரத்தில் தெரிந்தது. சில பிரயாணிகளும் ஸ்டேஷன் மாஸ்டரும் பிளாட்பாரத்தில் தயாராக நின்று கொண்டிருந்தனர். ஷெப் வழக்கமாகத் தான் நிற்கும் அந்த இடத்தில் - தண்டவாளங்களுக்கு நடுவே - வரும் ரயிலை எதிர்நோக்கியபடி நின்று கொண்டிருந்தது. அது அப்படி நிற்பதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. அது சகஜமான காட்சி. வண்டி அருகே வரும் போது கடைசி விநாடியில் ஷெப் தண்டவாளத்திலிருந்து தாவிப் பிளாட்பாரத்தில் ஏறிக் கொள்ளும். ஐந்து வருஷங்களாக அது இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறது.

வண்டி தனது வேகத்தைக் குறைத்தபடி பிளாட்பாரத்தின் விளிம்பை ஒட்டி ஊற்போல் ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தது. மூக்கலும் முனகலும் பெருமூச்சுமாக. ஷெப் தன் தலையை உயர்த்திப் பிளாட்பாரத்துக்குத் தாவ முயன்றது. ஆனால் ஏனோ இம்முறை அது துரிதமாகச் செயல்படவில்லை. சில விநாடிகள் தாமதித்துவிட்டது. தண்டவாளத்தின் நடுவிலிருந்து பிளாட்பாரத்துக்குத் தாவ முயன்றபோது கால்கள் வழுக்கிவிட்டன. அவ்வளவுதான்; தடத்திலேயே மூட்டையாகச் சரிந்தது. ஒரு பெண் வீரிட்டாள். ''நாய்..... ஷெப்.....!'' ஸ்டேஷன் மாஸ்டர் கத்தினார் பரபரப்புடன். ''ஷெப்—சீக்கிரம்....''

ஆனால் காலம் கடந்துவிட்டது..... பூதாகாரமான ரயில் எஞ்சின் அந்த அற்புத நாய் மீது மோதி அதை இருபது அடிகள் வரை இழுத்துக் கொண்டே போய் விட்டது. நன்றியுள்ள நாய் ஷெப் இறந்துவிட்டது. முடிவற்ற அதன் எதிர்பார்ப்பு முடிந்துவிட்டது.


அன்று பகலே இந்தத் துக்ககரமான செய்தி நாடெங்கும் பத்திரிகைகள் மூலம் பரவியது. முதல் பக்கத்துச் செய்தியாக முக்கியத்துவம் பெற்றது. லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் ஷெப்பின் மரணத் துக்காகக் கண்ணீர் விட்டார்கள். ஃபோர்ட் பெண்டன் சோகமே வடிவாக விளங்கியது. இரண்டு நாட்கள் கழித்து, ஒவ்வொருவரும் தங்களுடையது என்று கருதி அன்பு செலுத்திய பெண்டன் நகரத்து மக்கள் ஷெப்பின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டார்கள். கடைகள் மூடப்பட்டன. பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. இல்லத்தரசிகள் சமையல் அறையைப் புறக்கணித்து ஈமச் சடங்கு ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

கல்லறையில் பாதிரியார் ஷெப்புக்கு இறுதி அஞ்சலி செலுத்திப் புஷ்பமாலை சூட்டினார்.

''சுயநலம் நிறைந்த இந்த உலகில் கொஞ்சமும் சுயநலமில்லாத ஒரு தோழன் மனிதனுக்கு உண்டென்றால் அது நாய்தான். அது அவனை என்றும் கைவிடுவதில்லை. நன்றி மறப்பதில்லை, துரோகம் புரிவதில்லை. வாழ்விலும், தாழ்விலும் ஆரோக்கியமான நிலையிலும் நோய்வாய்ப்பட்ட போதும் மனிதனின் தோழனாகிய நாய் எப்போதும் அவன் அருகிலேயே இருக்கும்.''

சாரணச் சிறுவன் தனது ஊதுகுழல் மூலம் சோக கீதமிசைக்க ஷெப்பின் உடல் புதை குழிக்குள் அமைதிபெற இறக்கப்பட்டது. பெண்மணிகளும் குழந்தைகளும் வெட்கப்படாமல் விக்கி விக்கி வாய்விட்டு அழுதார்கள்.

இன்றும் பெண்டன் நகரத்துக் கல்லறையில், ஷெப் அமைதிபெற்ற இடத்தில், மரத்தாலான அதன் கம்பீரமான பெரிய உருவம் இருப்பதைக் காணலாம். பிரயாணிகளும் அந்த ஊர் மக்களும் அதை ஸ்டேஷனிலிருந்து காணும் போது நெஞ்சிலே கசிவான எண்ணங்கள் நிறையக் கண் கலங்குவார்கள்.




ஒரு கோழி ஆண்டுக்கு எத்தனை முட்டைகள் இடுகின்றன தெரியுமா ?

ஒரு கோழி ஆண்டு ஒன்றுக்கு சுமார் 180 முட்டைகள் இடும். இது கோழியின் எடையைப் போல் மூன்று மடங்கு. ஒரு கோழி முட்டையில் பி1, பி2, மற்றும் புரதச் சத்துக்கள் நிறைய இருக்கின்றன. உணவாக உபயோகமாகும் முட்டை என்னென்ன தொழிலுக்கு உபயோகமாகிறது தெரியுமா ?

முட்டையின் உதவியால் அழகு சாதனம், பாலிஷ், தந்தக் குப் பூசும் சாயங்கள், பிசின், புத்தகம் பைண்டிங் செய்ய, தோல் வேலைகள், மருந்துகள், வர்ணங்கள், அச்சு மை, சோப்பு, வார்னீஷ், ஒயின் (மது), ரொட்டி மற்றும் ஐஸ் கிரீம் தயார் செய்யவும் உபயோகமாகிறதாம்.

- பொன்மலை பரிமளம்





அவள் ஓர் அநாதைச் சிறுமி. சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அல்லலுற்ற அவளை ஆதரித்து ஆளாக்க உற்றார் உறவினர் யாருமே இல்லை. ஒரு நாள் அவளது பரிதாப நிலையைக் கண்ட ஒரு பெரியவர் அவளை அழைத்துச் சென்று ஒரு நல்ல குடும்பத்தில் சிறு சிறு பணிகள் செய்ய அமர்த்தினார்.


அந்தச் சிறுமியின் பெயர் பொன்னி. அவளது குணமும் பொன்னானதுதான். வேலைக்குச் சென்ற சில நாட்களுக்கெல்லாம் அவ்வீட்டிலுள்ளோர் அனைவரது உள்ளத்தையும் அவள் கவர்ந்துவிட்டாள். எந்த நேரமும் புன்சிரிப்புத் தவழும் அவளது இன்முகமும், சொன்ன வேலையைத் தட்டாது, குறித்த காலத்தில் செய்து முடிக்கும் அவளது திறமையும், அவளை விரைவில் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகவே ஆக்கி விட்டன.

குப் பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தினர் போன்று இருந்த அவர்களை வண்டியின் இறுதியில் அமர்ந்திருந்த பொன்னியின் கூரிய கண்கள் சட்டென்று கண்டு கொண்டன. உடனே மெதுவாக வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள் அவள். வண்டியிலுள்ளவர்களை எச்சரித்து ஒவ்வொருவராகத் தப்புவிக்க முயன்றாள்.

ஆனால் அவளது முயற்சி செயலாவதற்கு முன்னரே, 'குபீர்' எனப் பாய்ந்து விட்டனர் கொள்ளைக் கூட்டத்தினர். உடனே பொன்னி பயந்து போய், மெள்ள நழுவிச் சென்று ஒரு பெரிய மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

ஈவு இரக்கமற்ற கொள்ளைக் கூட்டத்தினர் வண்டியிலிருந்த அனைவரையும்

உழைப்பு அளித்த உயர்வு



திருமதி சேதுராம்

ஒரு முறை அவர்கள் அனைவரும் அடுத்த ஊர் ஒன்றுக்கு, ஒரு திருமணத்தில் கலந்து கொள்ளச் சென்றனர். ஒரு பெரிய மாட்டு வண்டி பூட்டிக் கொண்டு அதில் அனைவரும் அமர்ந்து போயினர். வழக்கப்படி பொன்னியும் உடன் சென்றாள்.


வழியில் ஓர் அடர்ந்த காடு. அதைக் கடந்துதான் அவர்கள் அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டும். காட்டுக்குள் நுழையும்போதே இருட்டி விட்டது. நீண்டு அடர்ந்த அந்தக் காட்டை விரைவில் கடந்துவிடவேண்டும் என்று வண்டிக்காரன் மாடுகளை அடித்து விரட்டி ஓட்டினான்.

நடுக் காட்டில் வண்டி செல்லும்போது, மரங்களின் இடையே பதுங்கிப் பதுங்கி வந்தனர் சிலர். கறுப்பு உடையும் முகமூடியும் அணிந்து பார்ப்பதற்

கொன்று குவித்துவிட்டு அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் பிற பொருள்களையும் பற்றிக் கொண்டனர். வண்டி மாடுகளையும் ஓட்டிக் கொண்டு தங்கள் வழியே சென்றனர்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டே அச்சத்தால் வாயடைத்துப் போய் மரத்தின் பின்னால் நின்றிருந்தாள் பொன்னி. தனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அந்தக் குடும்பத்தினர் அநியாயமாகக் கொலை செய்யப்படுவதை நேரில் பார்த்தும் அவளால் ஏதுமே செய்ய இயலவில்லை!

பொழுது விடிந்ததும் தனது மறைவிடத்திலிருந்து வந்து கொள்ளையர் நடத்திச் சென்ற கோரச் செயல்களைக் கண்டாள். கதறி அழுதாள். மனம் கலங்கிய நிலையில், கால் போன போக்கில் நடந்து சென்றாள்.



நெடுந்தூரம் நடந்தும் அவளுக்கு ஊர் ஏதுமே தென்படவில்லை. நண்பகல் வரைக்கும் அந்தக் காட்டிலேயே அங்கும் இங்கும் அலைந்தாள். காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடாததால் அவளுக்குப் பசி வேறு காதுகளைக் 'குப்' என்று அடைத்தது. இறுதியில் நடக்கக் கூட இயலாத நிலையில் ஒரு மரத்தடியில் விழுந்து விட்டாள்.

அப்போது அவள் முன்னர் தங்கத்தினால் செய்யப்பட்ட நீண்ட சாவி ஒன்று வந்து விழுந்தது. கூடவே அசரீரியாக ஒரு குரல்: ''பொன்னி! கவலைப்படாதே ! இந்தப் பொன்சாவியை எடுத்துக் கொள். நீ உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு நேர் எதிரே உள்ள மரத்தின் அருகில் போ. அடி மரத்தில் ஒரு சிறிய துவாரம் இருக்கும். அதில் இந்தச் சாவியைச் செருகிக் கதவைத் திறப்பதுபோல் திருப்பு. உடனே மரத்தில் கதவு ஒன்று திறந்து வழிவிடும். மரத்தின் உள்ளே சென்றால் உனக்குத் தேவையான உணவு வகைகள் நிறைய இருக்கும். எடுத்து வயிறாரச் சாப்பிடு'' என்று கூறியது.

தனது இடர்ப்பட்ட நிலைக்கு இரங்கித் தெய்வமே தனக்கு உதவுகிறது என்று எண்ணியவாறு, பொன்னி, அசரீரி கூறியவாறே செய்தாள். மரத்தைத் திறந்ததும் உள்ளே ஒரு பெரிய கூடம் இருப்பது பொன்னிக்குத் தெரிந்தது. அதில் விதம் விதமான உணவுப் பண்டங்கள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. பொன்னி உள்ளே சென்று தனது பசி தீரும் மட்டும் உண்டு முடித்தாள். பிறகு வெளியே வந்து கதவைச் சாத்திப் பூட்டினாள்.

உண்ட களைப்புத்தீர அந்த மரத்தினடியில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டாள் பொன்னி. தனது அழுக்கும் கந்தலுமான ஆடைகளைப் பார்த்து நல்ல ஆடை அணிய விரும்பினாள். ஆனால் ஆடைக்கு எங்கே போவது? சுற்றுப்புறமெங்கும் ஏதொரு ஊரும் இருப்பதாகத் தெரியவில்லை. தனது நிலையைப் பார்த்துக் கொண்ட அவளுக்குச் சிரிப்பும்

வருத்தமும் ஒருங்கே வந்தன. வாய் விட்டு வெறுப்போடு சிரித்தாள்.

அதுபோது அவள் எதிரே ஒரு வெள்ளிச் சாவி வந்து விழுந்தது. கூடவே முன்பு மொழிந்த அசரீரி, ''உணவு இருந்த மரத்துக்கு அடுத்த மரத்தை இச்சாவியைக் கொண்டு திற. அதில் உனக்குத் தேவையான ஆடைகள் கிடைக்கும்'' என்று அறிவித்தது. அசரீரி கூறியது போலவே அடுத்த மரத்தை வெள்ளிச் சாவியைக் கொண்டு திறந்தாள் பொன்னி. அதிலும் முதல் மரத்தில் இருந்தது போலவே ஒரு பெரிய கூடம் இருந்தது. அந்தக் கூடத்தில் ஒரு பெரிய அலமாரியில் கண்களைக் கவரும் வண்ண வண்ண ஆடைகளும், ஒளி வீசும் பற்பல அணிகலன்களும் இருந்தன. அங்கு ஒரு பெரிய நிலைக்கண்ணாடியும் இருந்தது. ஒப்பனைப் பொருள்கள் பலவும்கூட அங்கு இருந்தன. குளிப்பதற்கு ஓர் அண்டாவில் தண்ணீரும் இருந்தது. வியப்பால் கண்கள் விரிய அவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்தாள் பொன்னி. பின்னர் ஆசை தீரக் குளித்துத் தனது மனம் விரும்பிய வகையில் அங்கிருந்த பொருள்களைக் கொண்டு தன்னை அழகுற அலங்கரித்துக் கொண்டாள். கண்ணாடியைப் பார்த்துப் பார்த்து ஒப்பனை பலவும் செய்து கொண்டாள். அலங்காரம் முடிந்த பிறகு, மரத்தைவிட்டு வெளியே வந்து மரத்தைப் பழையபடி சாத்திப் பூட்டி விட்டாள். அதற்குள் பொழுது சாய்ந்து இருட்டத் தொடங்கி விட்டது. இரவு பாதுகாப்பாகத் தங்க ஏற்ற இடமாக ஏதாவது இருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்தாள்.

உடனே அவள் எதிரே ஒரு வெண்கலச் சாவி வந்து விழுந்தது. கூடவே பழைய அசரீரிக் குரல், ''உணவு உடை தந்த இரு மரங்களுக்கு நேர் எதிரில் உள்ள மரத்தை இந்த வெண்கலச் சாவியால் திற. உனக்குப் படுக்க வசதி கிடைக்கும். மேலும் இனி நீ இங்கேயே தங்கி, தினமும் இம்மூன்று மரங்களில் உள்ளவற்றைப் பயன்படுத்திக் கொண்டு வாழலாம். வேறு எங்கும் செல்ல வேண்டாம்'' என்று ஒலித்தது.

பொன்னி வெண்கலச் சாவியால் மூன்றாம் மரத்தைத் திறந்தாள். அதிலும் ஒரு பெரிய கூடமும், அழகான ஒரு கட்டிலும் இருந்தன. அக்கட்டிலின் மேல் பட்டு மெத்தை விரிக்கப்பட்டுத் தலையணைகளும் போடப்பட்டிருந்தன. பொன்னி உள்ளே சென்று கதவைச் சாத்தி உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டாள். சுகமாகக் கட்டிலில் படுத்தாள். யாருமற்ற அநாதையும் ஏழைப் பெண்ணுமான தனக்கு ஆண்டவனே இவ்வாறெல்லாம் உதவி செய்து ஆதரிக்கிறார் என்று நம்பினாள் அவள். மிகுந்த அசதி அவளை விரைவிலேயே ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்த்தி விட்டது.

இவ்வாறே பல நாட்கள் சென்றன. வேளா வேளைக்குச் சுவைமிக்க உணவும் அழகுக்கு அழகு செய்ய விதம்விதமான ஆடை அணிகளும், நல்ல ஓய்வும் உறக்கமும் அவளது உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகமும் தெம்பும் தந்தன. அதனால் நாளுக்கு நாள் அவள் உடலின் அழகு கூடியது.

தனக்கு இவ்வாறெல்லாம் உதவுவது அந்தக் காட்டிலிருக்கும் 'ஒரு வன தேவதையாக இருக்குமோ என்ற ஐயம் ஒரு நாள் திடீரென்று அவளுக்கு ஏற்பட்டது.

அவ்வாறாயின் தானும் நன்றி செலுத்தும் வகையில் அத்தேவதைக்கு ஏதாவது உதவி புரிய இயலுமா என்னும் ஆவல் கொண்டாள். வழக்கம் போலவே வாய்விட்டுத் தனது எண்ணத்தை வெளியிட்டாள். உடனே பழைய அசரீரி, ''ஆம், நீ எனக்குச் செய்ய வேண்டிய உதவி ஒன்று இருக்கிறது'' என்றது.

பொன்னிக்கு மிகவும் மகிழ்ச்சியாகப் போய்விட்டது. அசரீரி சொல்லும் பணியைச் செய்து முடிப்பதாக வாக்களித்தாள்.

''இங்கிருந்து நேர் கிழக்காக நீ செல்ல வேண்டும். இக்காட்டின் இறுதியில் ஒரு பழைய வீட்டைக் காண்பாய். அதன் வாயிலில் வழியை அடைத்துக் கொண்டு ஒரு கிழவி உட்கார்ந்திருப்பாள். உன்னைப் பலவித கேள்விகளைக் கேட்டுத் துளைப்பாள். அவளுக்கு நீ வாய் திறந்து மறுமொழி ஏதும் சொல்லவே கூடாது. அவளைக் கடந்து செல். உள்ளே வலது பக்கத்தில் ஓர் அறை இருக்கும். அவ்வறையினுள் ஒரு மேசை மேல் பல மோதிரங்கள் கிடக்கும். அவற்றை நீ ஏறெடுத்தும் பார்க்காதே. அவற்றின் இடையில் ஓர் ஒளி மங்கிய பித்தளை மோதிரம் கிடக்கும். அதை மட்டும் எடுத்துக் கொண்டு திரும்பிப் பாராது விரைந்து இங்கே வந்து விடு'' என்று அசரீரி கட்டளை இட்டது.

அக்கட்டளையின்படி பொன்னி நேர் கிழக்காகச் சென்று காட்டின் இறுதியில் இருந்த அந்தப் பழைய வீட்டை அடைந்தாள். அவ்வீட்டின் வாயிலில் வழியை அடைத்துக் கொண்டு உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தாள் ஒரு கிழவி. அவளைக் கடந்து பொன்னி உள்ளே போக முயன்

றாள். உடனே அக்கிழவி அவனிடம் அன் போடு ''யாரு கண்ணு நீ? கொள்ளை அழகு கொண்டவளாக இருக்கிறாயே! உள்ளே என்னத்துக்கம்மா போகிறாய்? இங்கேயே உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிரு, என் இராசாத்தி'' என்று பல விதமாகக் கொஞ்சிக் குழைந்து பேசினாள்.

பொன்னி அவளது கொஞ்சல் மொழிகளில் மயங்கவும் இல்லை; வாய் திறந்து அவளுக்கு விடை ஏதும் சொல்லவும் இல்லை. தன் வேலையிலேயே அவள் கருத்தாக இருந்து, சமயம் பார்த்து அந்தக் கிழவியின் பிடியினின் றும் தன்னை விடுவித்துக் கொண்டு வீட்டி னுள் சென்றாள். வலது பக்க அறையி னுள் நுழைந்தாள். அங்கிருந்த மேசை யின்மேல் வைர, வைடூரிய, மரகத, கோமேதக, பவள, ரத்னக் கற்கள் பதிக்கப்பட்ட பலவித மோதிரங்கள் ஒளியை வாரி இறைத்து அவளது கண் களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந் திழுத்தன. அசரீரியின் எச்சரிக்கைப் படி ஒரு விரலால் அவற்றைத் தள்ளித் தள்ளிப் பார்த்து, ஒளி மங்கிய பித்தளை மோதிரத்தைத் தேடி எடுத்தாள்.

பொன்னிக்கு ஒரே மகிழ்ச்சியாகி விட்டது. மோதிரத்தை எடுத்துக் கொண்டு வெளியே ஓடக் கிளம்பினாள். அப்போதும் அந்தக் கிழவி அவளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு, ''என் கண்ணே! இது பித்தளை மோதிர மாச்சே? இது எதற்கு உனக்கு? மேசையின் மேல் பல விதமான விலை உயர்ந்த மோதிரங்கள் குவிந்து கிடக்கின்றன. உனக்குத் தேவையானவற்றை வாரிக் கொள். இந்த மோதிரத்தை மட்டும் என்னிடம் தந்துவிடு, என் செல்வமே!'' என்று நயம்படப் பேசினாள்.

பொன்னி அக்கிழவியைத் திரும்பி யும் பார்க்கவில்லை. மோதிரத்தையும் கிழவியின் கைக்கு எட்ட விடவில்லை. உறுதியாக அதனைப் பற்றிக் கொண்டு கிழவியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஒரே ஓட்டமாகக் காட்டுக் குள் ஓடிச் சென்று, உணவு, உடை தந்த மரங்களினிடையில் நின்று ''இதோ இந்த மோதிரத்தைக் கொண்டு வந்து விட்டேன்'' என்று கூவினாள்.

உடனே, அவளை அதுவரையில் ஆத ரித்து வந்த மூன்று மரங்களும் அவள் மேல் சாய்ந்தன. ''ஐயோ! மரங்கள் முறிந்து என்மேல் சாய்கின்றனவே!'' என்று அச்சத்தால் பொன்னி கண்களை இறுக மூடிக் கொண்டாள். சில விநாடி களில் தன்னை யாரோ அணைத்துப் பிடிப் பது போலத் தோன்றவே, கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தாள். ஓர் அழகிய இளைஞன் இரு கைகளாலும் தன்னை ஏந்தியிருப்பது கண்டு வியப்பும் வெட்கமும் சேரத் தலை குனிந்தாள்.

அவளை அமைதிப்படுத்தித் தன் வர லாற்றைக் கூறினான் அவ்விளைஞன். அவன் ஓர் அரசகுமாரன். சில ஆண்டு களுக்கு முன்பு ஒரு நாள் அந்தக் காட்டில் வேட்டையாடியபோது அவன் விட்ட ஓர் அம்பு தவறுதலாக ஒரு தேவதை யின் மேல் பட்டு விட்டது. அதனால் வெகுண்ட அத்தேவதை அவனை மூன்று துண்டங்களாக வெட்டி மூன்று மரங்க ளாகும்படி சபித்து விட்டது. அவனது உயிரை ஒரு பித்தளை மோதிரத்துக்குள் வைத்து எடுத்துச் சென்று விட்டது.

தான் வேண்டுமென்று அம்பு விட வில்லை என்றும், ஒரு மானின் மீது விட்ட அம்பு தவறுதலாக அந்தத் தேவ தையின் மேல் பட்டுவிட்டது என்றும் இளவரசன் எவ்வளவோ கெஞ்சிக் கூறி மன்னிப்புக் கோரினான். அதற்கு அத்தேவதை, ''இட்ட சாபம் இட்டது தான். ஆனால் யாராவது ஒருவர் அப் பித்தளை மோதிரத்தைக் கொண்டுவந்து அம்மூன்று மரங்களிடையில் வைத்தால் அப்போது அவனுக்குச் சாப விமோ சனம் ஆகிப் பழைய உருப் பெறு வான்'' என்று கூறியது. மனம் இரங்கிய தேவதை தன் சாபத்தை மாற்ற முடியாததால்தான் அம் மூன்று மரங்களிலும் உணவு, உடை, படுக்கை முதலியவைகளை நிறைத்து இருந்தது. அந்தப் பழைய வீட்டில் இருந்த கிழவிதான் அந்தத் தேவதை. அதுவரை அம்மோதிரத்தை எடுக்கச் சென்ற பலரையும் தனது சாகச மொழிகளால் மனம் மாற்றி அனுப்பி விட்டது அது. ஆனால் தூய்மையான உள்ளமும், தன்னலமற்ற உழைப்பும் கொண்ட பொன்னி அதை வென்றுவிட்டாள்.

பழைய உருப் பெற்ற இளவரசன் பொன்னியை அழைத்துக் கொண்டு தனது நாட்டுக்குச் சென்றான். இள வரசனை நீண்ட நாட்களாகக் காணாது ஏங்கியிருந்த அவனது பெற்றோரும், ஊராரும் அவனை உயிரோடு கண்டதும் மிகவும் மகிழ்ந்தனர்.

பொன்னியின் அழகு அரசனையும் அரசியையும் கூட மிகவும் கவர்ந்துவிட் டது. எனவே தங்கள் மகனுக்கு அவன் விரும்பிய பொன்னியையே ஒரு நல்ல நாளில் மணம் முடித்து வைத்தார்கள்.

பொன்னி தனது வாழ்நாள் முழுதும் நாட்டு மக்களுக்குச் சேவை செய்வ திலேயே பெரிதும் நாட்டம் கொண்ட வளாய், மக்கள் விரும்பும் மாண்பு மிக்க அரசியாக நீடூழி வாழ்ந்து வந்தாள்.



ஷீலாவைக் காணோம்-
கதை வாண்டுமாமா
சித்திரம் ரமணி..
19
டைகரைக் கண்ட அந்தக் கொடியவனுக்குத் தாங்க முடியாத ஆத்திரம் வந்தது. டைகரும் அவன் மனநிலையை அறிந்து எதிர்க்கத் தயாரானது.
டைகர்.. தப்பி ஓடி விடு...
இந்தக் கடவுள் உன்னைக் கொன்று குழி வெட்டிப் புதைத்து விடுத்தான் மறு காரியம்.
வெறி கொண்ட திருடன் டைகரின் கழுத்தை அழுத்தி நெருக்கினான். டைகரின் ஈனமான மரண வலியைக் கேட்டுத் துடித்துப் போன ஷீலா டைகரிடம் தளர்த்தி விடப்பட்டிருந்த தன் கட்டுக் கைகளை முழுக்கப் பிரயாசையுடன் அவிழ்த்துக் கொண்டாள்.
காலடியில் கிடந்த ஒரு கல்லை எடுத்து...
கொடியவனே, ஒழிந்து போ. என் டைகரை ஏன் கொல்லப் பார்க்கிறாய்?
கல்லால் தாக்கப் பட்ட தயவன் பொறி கலங்கி நிலை விழுந்தான். அந்த இடைவெளியில் ஷீலா கால் கட்டுகளையும் அவிழ்த்துக் கொண்டு குகையை விட்டு ஓடலானாள்...
ஓடு.. டைகர்.. ஓடு.



மூச்சு இரைத்தது ஷீலாவுக்கு...
ஐயா, எங்களுக்கு உதவுங்கள். ஒரு கொடியவன் எங்களைத் துரத்தி வருகிறான். என்னைக் கடத்தி வந்த கயவன் அவன்.
கடத்தி வந்த வனா? உன்னையா? உள்ளே வா, விவரமாகச் சொல்லு பொண்ணு.
தேன். இங்குதான் வந்திருக்க வேண்டும். அங்குள்ளவர்களிடம் அவள் உண்மையைக் கூறுமுன் அவளை மடக்கி விட வேண்டும்.
அவனைக் கண்டதும் உறுமிப் பாய்கிறது. கடையிலிருந்த ஒருவன் அதைப் பிடித்துக் கொள்ள...
அக் கயவன் அங்குள்ளோர் நம்பும்படி நடிக்கவே ஷீலாவின் பேச்சு எடுபடவில்லை.
இந்த பாரு பாப்பா, அப்பா அடிச்சா அதுக்காக இப்படி வீட்டை விட்டு ஓடி வந்துடுவாங்களா? போம்மா இனிமே அவரு உங்கிட்ட அன்பா இருப்பாரு இரு!
முரண்டு பிடித்த டைகரையும் ஷீலாவையும் இழுத்துக் கொண்டு அவன் வெளியேறிய போது கடையின் பின் பக்கமுள்ள அறையின் ஜன்னல் வழியே ஒரு பிஞ்சு உள்ளம் தவிப்போடு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஷீலாவின் பேச்சைப் பெரியவர்கள் நம்பாவிட்டாலும் அந்தப் பிஞ்சு உள்ளம் நம்பியது.
இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அவள் அவனுடைய மகளாக இருக்க முடியாது.
தொடரும்...

இரண்டு கிராமங்களை விழுங்கிய ஆடு

கு. வரதராஜன்

கோடை காலத்தில் ஒரு நாள் சக்கரவர்த்தி ஷாஜஹான் வேட்டைக்குச் சென்றார். காட்டில் ஓர் அழகிய புள்ளி மானைக் குறி வைத்துத் துரத்திச் சென்றார். மான் எளிதில் சிக்கவில்லை. காற்று வேகத்தில் பாய்ந்து ஓடியது.

ஷாஜஹான் விடாமல் துரத்தினார். தம் கூட வந்த படைகளைப் பிரிந்து காட்டில் வெகு தூரம் சென்றுவிட்டார்.

அப்போது கோடை காலத்தின் அனல் காற்று கடுமையாக வீசிற்று. அனல் காற்றுடன் புழுதியும் மணலும் கலந்து சக்கரவர்த்தியையும் அவர் குதிரையையும் தாக்கின.

நீண்ட தூரம் ஓடியதால் குதிரையும் சோர்ந்து விட்டது. ஷாஜஹானும் களைப்படைந்தார். தாகத்தால் அவரது நாக்கு வறண்டது. சுற்றுப்புறங்களிலும் நீர் நிலைகள் இருப்பதற்கான அறிகுறிகளைக் காணோம். மனித சஞ்சாரமே தென்படவில்லை. எனினும் நம்பிக்கையுடன் குதிரையை விரட்டினார். இறுதியில், நீண்ட தூரத்தில் ஓர் ஆட்டு மந்தையைக் கண்டார். உடனே, குதிரையை அந்தத் திசையில் ஓட்டினார். சக்கரவர்த்தியின் நம்பிக்கை வீண் போகவில்லை. அங்கே ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

சக்கரவர்த்தி ஷாஜஹான் அந்த ஆடு மேய்க்கும் சிறுவனிடம் போய்த் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டார்.

அந்தச் சிறுவன் உடனே தன் ஆடுகள் சிலவற்றைப் பிடித்தான். அவற்றின் பாலைக் கறந்து பாதுஷாவிடம் கொடுத்தான். ஆவலுடன் அதை வாங்கிக் குடித்தார் ஷாஜஹான். அவருடைய தாகம் தீர்ந்தது. களைப்பும் நீங்கியது!

தக்க சமயத்தில் உதவி, தனது தாகத்தைத் தீர்த்த சிறுவனை நன்றியுடன் பார்த்தார் சக்கரவர்த்தி. அவனுக்கு ஏதேனும் பரிசளிக்க எண்ணினார். ஆனால் அந்தச் சமயம் ஷாஜஹானின் கையில் எதுவுமில்லை. ஆகையால், ஓர் இலையை எடுத்து அதில் ஓர் அடையாளக் குறியிட்டார். அதைச் சிறுவனிடம் தந்து, ''தம்பி! ஒரு வெள்ளிக் கிழமை தில்லி பெரிய மசூதியில் தொழுகை முடிந்து வரும்போது என்னிடம் இந்த இலையைக் கொடு. உனக்கு அன்பளிப்பாக இரண்டு கிராமங்களைக் கொடுக்கிறேன். இந்த இலையின் மதிப்பு இரண்டு கிராமங்கள்! நினைவிருக்கட்டும்'' என்றார் பாதுஷா.

அவர்தான் சக்கரவர்த்தி ஷாஜஹான் என்பதை அப்போதுதான் அறிந்தான் அந்தச் சிறுவன். உடனே மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். பாதுஷாவின் காலில் விழுந்து வணங்கினான்.

ஆடு மேய்க்கும் சிறுவனை, அன்புடன் தட்டிக் கொடுத்துவிட்டு மன்னர் ஷாஜஹான் விடைபெற்றார்.

சக்கரவர்த்தி அடையாளமிட்டுத் தந்த இலையைச் சிறுவன் பத்திரமாக எடுத்துச் சென்றான். இரவு படுக்கும் போது அந்த இலையைத் தன் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு தூங்கி விட்டான்.

என்னே, துரதிர்ஷ்டம்! அந்த இலையை ஓர் ஆடு தின்று விட்டது. காலையில் கண் விழித்த சிறுவன் இதை அறிந்ததும் கண்ணீர் விட்டான். முட்டாள்தனமாக இலையைப் பறிகொடுத்து விட்டதை எண்ணி எண்ணி வருந்தினான்.

''ஐயோ! இரண்டு கிராமங்களை ஓர் ஆடு விழுங்கி விட்டதே!'' என்று துக்கம் தாங்காமல் கதறி அழுதான்.

இப்படிக் கூறிக்கொண்டே தெருத் தெருவாக அவன் அலைந்தான். இதைக் கவனித்த மக்கள் ஆடு மேய்க்கும் பையனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று கூறினார்கள். கைதட்டிச் சிரித்தார்கள். எனினும், சிறுவன் யாரையும் பொருட்படுத்தவில்லை. ''ஐயோ! இரண்டு கிராமங்களை ஓர் ஆடு விழுங்கி விட்டதே!'' என்று கூவிக்கொண்டே நடந்தான்.

அதைக் கவனித்த ஒரு கிழவர் ஆழ்ந்து சிந்தித்தார். பிறகு அந்த ஆடு மேய்க்கும் சிறுவனை அழைத்து அன்புடன் விசாரித்தார்.

சிறுவன் நடந்த சம்பவங்களை விளக்கமாகக் கூறினான்.

உண்மையை அறிந்த கிழவர் கூறினார்: ''தம்பி! சக்கரவர்த்தி ஷாஜஹான் நேர்மை தவறாதவர். உன்னை எளிதில் மறக்க மாட்டார். எனவே, 'ஓர் ஆடு இரண்டு கிராமங்களை விழுங்கி விட்டது' என்று இங்கே கூச்சல் போட்டுப் பயனில்லை. தில்லிக்குப் போ! வெள்ளிக் கிழமை பள்ளிவாசல் முன்னால் நின்று இப்படிச் சத்தம் போடு.

உடனே பாதுஷா உன்னை யாரென்று புரிந்து கொள்வார்! கட்டாயம் உனக்குப் பரிசளிப்பார்!''

கிழவர் கூறிய ஆலோசனையே சரியானது என்று உணர்ந்தான் சிறுவன். உடனே தில்லிக்குப் போனான். பெரிய மசூதியின் முன் நின்றுகொண்டு, ''என் ஆடு இரண்டு கிராமங்களை விழுங்கிவிட்டது!'' என்று கூவினான்.

மக்கள் சிரித்துக் கொண்டே நடந்தார்கள். கடைசியில் தொழுகை முடிந்து கூட்டத்துடன் வந்த பாதுஷாவின் காதுகளில் பையனின் கூச்சல் விழுந்தது.

உடனே அதன் பொருள் பாதுஷாவுக்கு விளங்கி விட்டது. சிறுவனை அழைத்துச் சென்று வாக்களித்தபடியே இரண்டு கிராமங்களையும் ஏராளமான பரிசுகளையும் கொடுத்து அனுப்பினார்.





சிட்டுக் குருவி

பட்டு இறக்கை பளபளக்க
பறந்து பறந்து ஓடிவா!
சிட்டுக்குருவி எங்கள் முன்னே
சிறகடித்துப் பாடி வா!
கொட்டிக் கிடக்கும் நெல்மணியைக்
கொத்திக் கொண்டு ஆடிவா!
விட்ட மதிலே கூடுகட்டி
வீட்டில் விளை யாடவா!

''கலாபாரதி''

கல் யந்திரம்

கடல் நீர் உப்பானதற்கு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கதை வழங்குகிறது. இதோ இப்படி ஒரு கதை.

ரோமாபுரியை அகஸ்டஸ் மன்னன் ஆண்டு வந்தபோது டென்மார்க் தேசத்தை பெரோட் என்ற மன்னர் ஆண்டு வந்தார். நாடு சுபிட்சமாக இருந்தது. சந்தோஷமும் சமாதானமும் நிலவியது நாட்டில். மரங்களை வெட்டத்தான் கோடரி பயன்பட்டது. வாளும் வேலும் வீட்டின் அலங்காரப் பொருள்களாக விளங்கின. யுத்தத் தளவாடங்கள் துருப் பிடித்துக் கிடந்தன. வீட்டுக் கதவுகளை யாரும் இரவில் கூடச் சாத்துவதில்லை. தானியக் கிடங்குகள் எப்போதும் திறந்தே இருந்தன. ராஜபாட்டையில் ஒரு மரத்தில் தங்க மோதிரத்தைக் கட்டித் தொங்கவிட்டிருந்தாலும்கூட அது அப்படியே கவனிப்பாரற்றுக் கிடக்குமாம். பெரோடின் ஆட்சியிலே நாடு நேர்மையாளர்களையும் செழிப்பையும் கொண்டிருந்ததற்கு உதாரணமாக இதைக் கூறினார்கள்.

ஒரு சமயம் டென்மார்க்கில் மன்னர் பெரோடின் ஆட்சியில் பூமிக்கடியிலிருந்து ஒரு பெரிய கல் யந்திரம் தோண்டி எடுக்கப்பட்டது. நம் வீடுகளில் மாவு அரைக்கப் பயன்படுத்துகிறோமே அது போன்ற யந்திரம் அது. ஆனால் மிக மிகப் பெரியது. அக்கல் யந்திரத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ''இது தானியங்களை மட்டும்தான் மாவாக அரைக்கும் என்பதில்லை. இதன் உடைமையாளர் எதை விரும்பினாலும் அதை 'அரைத்துக் கொடுக்கும் இந்த யந்திரம்'' என்று குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதை யாராலும் நகர்த்தக்கூட முடியவில்லை. அத்தனை பெரிதாக இருந்தது அக்கல் யந்திரம். மன்னர் பெரோட் ஒரு சமயம் ஸ்வீடனுக்குப் போனபோது அங்கிருந்து இரண்டு பெண் அடிமைகளை அழைத்து வந்தார். அந்தக் கைதிகளின் பெயர், ஃபெனியா, மெனியா. அவ்விரு பெண் கைதிகளும் அதிசயிக்கத்தக்க பலசாலிகளாக விளங்கினர். பழங்காலத்து ராட்சதர்களின் வழி வந்தவர்களோ என்று எண்ணும்படியான தோற்றம் கொண்டிருந்தனர். மன்னர் பெரோட் இவ்விரு அடிமைகளையும் தன் நாட்டிலிருந்த கல்யந்திரத்திடம் அழைத்துப் போய், 'இதை இயக்குங்கள்' என்று கட்டளையிட்டார்.

'' இந்த யந்திரத்தில் உங்களுக்கு எதை அரைத்துத் தர வேண்டும்?'' என்று கேட்டனர் ஃபெனியாவும் மெனியாவும்.

''செல்வத்தையும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அரைத்து அளிப்பாயாக'' என்றார் மன்னர் பெரோட்.

அடிமைப் பெண்களின் வலிமை மிக்க பெரிய கைகள் கல் யந்திரங்களின் கைப்பிடியைப் பற்றிச் சுற்றலாயின. கல் ஒன்றோடொன்று உரசுவதினால் ஏற்படும் ஒலி இனிமையான இசை போல் ஒலித்தது, மன்னர் பெரோடின் செவிகளில். அந்த ஒலியை அவர் எப்போதும் கேட்டுக் கொண்டிருந்தார். இரவில் அது தாலாட்டாக அவரைத் தூங்கப் பண்ணியது. இடையர்களின் மேய்ச்சல் கீதம், குடியானவர்களின் அறுவடைக் கோலாகலம், திருவிழாக்களின் குதூகல ஆரவாரம் இவற்றிடையேயும்கூட மன்னர் அக்கல் இயந்திரங்கள் ஏற்படுத்தும் கரகர ஒலியைக் கேட்டு மகிழ்ந்து போவார். அவர் காதுகளில் அவ்வொலி தனித்துக் கேட்கும். அவர் மனம் மகிழ்ச்சியால் நிறையும். நாட்டில் தங்கம் தண்ணீராக ஓடியது. உணவுப் பொருட்கள் குவிந்து கிடந்தன. சுபிட்சமும், சமாதானமும் நாடெங்கும் குடிகொண்டிருந்தன.

''வெகு காலமாக இந்தப் பெரிய யந்திரத்தை இடைவிடாமல் அரைத்துக் கொண்டே இருக்கிறோமே! நாங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ள



லாமா?'' என்று மன்னரிடம் கேட்டார்கள் ஃபெனியாவும் மெனியாவும்.

'' இளவேனிற் காலத்தில் மனம் மகிழ்ச்சியில் நிரம்பி இருக்கும்போது, குயில் தன் கானத்தை நிறுத்தவா செய்கிறது?'' என்று கேட்டார் மன்னர். ''நான் ஓய்வா எடுத்துக் கொண்டிருக்கிறேன். நாளெல்லாம் வாழ்வெல்லாம் நான் சுறுசுறுப்புடனும் சந்தோஷமாகவும் இல்லையா? குயில் தன் கானத்தையும் நான் என் உழைப்பையும் நிறுத்தும்போது நீங்களும் நிறுத்தலாம். அதுவரையில் நீங்கள் யந்திரத்தைச் சுழற்றுவதை நிறுத்தக் கூடாது'' என்றார் பெரோட்.

''எங்களுக்கு ஏற்படும் அயர்வைப் போக்கிக் கொள்ள நாங்கள் பாடவாவது செய்யலாம் அல்லவா?'' என்று கேட்டனர் பெண் அடிமைகள்.

''தாராளமாக. உங்கள் விருப்பம் போலப் பாடிக் களியுங்கள்'' என்று அனுமதி வழங்கினார் மன்னர்.

தணிவான ஆனால் கரகரப்பான குரலில் அவர்கள் பாடுவது மன்னருக்கு இதமாக இனிமையாக இருந்தது. அதைக் கேட்டபடியே கண்ணயர்ந்துவிட்டார். சந்திரன் உச்சி வானத்துக்கு வந்ததுகூடத் தெரியாது அவருக்கு. அடிமைகளுடைய பாட்டின் தன்மை மாறியதையும் அவர் அறியவில்லை. யந்திர அரவையின் வேகமும் கூடியது. ஃபெனியாவும் மெனியாவும் அந்தக் காலத்துத் தங்கள் ராட்சத மூதாதையர்கள் பற்றிய புகழ் பாடலானார்கள். சமாதானத்துக்குப் பதில் யுத்தமும், கொலையும் கொள்ளையும் நடத்திக் குதூகலித்த அவர்களைப் பற்றிப் பாடலானார்கள். அவர்கள் இப்படிப் பாடப் பாட பூமி நடுங்கியது. அழிவு, நாசம், மரணம் இவைகளை அந்த யந்திரம் உற்பத்தி செய்யலாயிற்று. மன்னர் மன்னனை பெரோடோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அவர் மட்டுமா? நாடே, நகரமே உறங்கியது. காவல் நிலையங்களில் உள்ளோர் கண்ணயர்ந்து கிடந்தனர். அடிமைகளின் கானம் செய்த கோலம் அது! கடலிலே பெரிய பெரிய கப்பல்களில் ராட்சதர்களைப்போன்ற வைக்கிங்குகள் வந்து இறங்கினார்கள். நாட்டிலே புகுந்து அவர்கள் கொலையும், கொள்ளையும் நடத்தினார்கள்.

கத்திகளின் கணீர் ஒலியையும், பெண்களின் பீதிக் குரலையும் கேட்டுக் கண் விழித்தார் பெரோட். படுக்கை அறையின் சுவர்களை வீரர்கள் மோதித் தகர்த்துக் கொண்டிருந்தார்கள். தாவி எழுந்து தன் வாளைக் கையில் எடுத்தார். ஆனால் அதற்குள் அவர்மீது பலம்





வாய்ந்த வாள் ஒன்று வந்து தாக்கி அவரைக் கீழே வீழ்த்தியது. தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்த அரண்மனை விதானம் கனல் றபடி அந்த மாவீரனின் உடல்மீது சரிந்தது. தலைசிறந்த வீரனுக்கு ஏற்ற தீக்குளிப்புத்தான் அது! ஃபெனியாவும் மெனியாவும் தங்கள் கானத்தையும் கல் யந்திரத்தைச் சுற்றுவதையும் நிறுத்தினார்கள்.

கொள்ளைக்காரர்கள் இங்குமங்கும் ஓடிக் கொள்ளையிட்டுக் கொக்கரித்தார்கள். அவர்கள் இந்த இரு அடிமைப் பெண்களிடமும் வந்தார்கள். கல் யந்திரத்தையும் அதில் பொறித்துள்ள வாசகத்தையும் கண்டார்கள். 'மன்னன் பெரோடின் சாம்ராஜ்யம் முழுவதற்கும் சமமான பரிசு இந்தக் 'கல் யந்திரங்கள்' என்று மகிழ்ச்சி கொப்பளிக்கக் கத்தினார்கள். அந்தக் கல் யந்திரங்களைத் தூக்கிக் கொண்டு தங்கள் கப்பலுக்கு வரும்படி அடிமைப் பெண்களுக்கு ஆணையிட்டார்கள். கப்பலில் கல் யந்திரமும் அடிமைப் பெண்களும் ஏற்றப்பட்டனர். சிறைப் பிடித்த கைதிகளுடனும் கொள்ளையிட்ட பெருஞ் செல்வத்துடனும் கப்பல்கள் நங்கூரத்தை எடுத்துக் கிளம்பின.

அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவனின் தோள்களைத் தனது உரம் மிக்க கைகளால் தொட்டுக் கேட்டாள் ஃபெனியா. ''ஐயா! நான் தங்களுக்கு என்ன அரைத்துத் தர வேண்டும்?''

''உப்பை உற்பத்தி செய்து கொடு'' என்றான் கடற்கொள்ளைத் தலைவன். ''ஏராளமான கால்நடைகளைக் கொன்று கப்பல்களில் மாமிசத்துக்காக சேமித்து வைத்திருக்கிறோம். அவை கெடாமல் பாதுகாக்க உப்புத்தான் தேவை இப்போது. ஆகவே நீங்கள் ஏராளமான உப்பை அரைத்துக் கொடுங்கள்'' என்றான்.






அடிமைப் பெண்கள் கல் யந்திரத்தின் கைப்பிடிகளில் தங்கள் வலுவான கரங்களைப் பதித்தார்கள். அதைச் சுழற்றி அரைக்க, காற்று ஊழிக் காலத்தைப்போல் 'ஊஊ' என்று ஊளையிட்டுக் கொண்டு வீசியது. அது அந்தப் பெண் அடிமைகளின் பெருமூச்சு. கப்பலின் பாய்மரங்கள் முறிந்தன. கடலில் அலைகள் கொந்தளித்து எழுந்து கப்பலின் பக்கங்களில் தாக்கின. இத்தனைக்கும் இடையிலே கல் யந்திரம் சுழன்று கொண்டேயிருந்தது. அவைகளின் இடையிலிருந்து வெள்ளை வெளேர் என்ற உப்பு உற்பத்தியாகிக் கப்பலின் மேல்தளத்தில் சிறு குப்பலாகக் குவிந்திருந்தது. ஊழிக் காற்று நின்றது. இதமான குளிர் காற்று வீசியது. வானத்திலே நட்சத்திரங்கள் மினுக்கிட்டன. துடுப்புப் போட்டதினாலும், போரிட்டதனாலும் களைப்படைந்திருந்த வீரர்கள் கண்ணயர்ந்தார்கள். கப்பலின் நடுவே கம்பீரமாக அமர்ந்து கண் மூடிக் கனவுலகிலே மிதந்து கொண்டிருந்த தலைவனை வலுமிக்க கரம் ஒன்று தொட்டு எழுப்பியது. ஃபெனியாவின் உறுதியான பெரிய முகம் அவன் முன்னால் குனிந்தது. ''ஐயா! இந்த உப்பு உங்கள் தேவைக்குப் போதுமல்லவா? எங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுங்கள்'' என்றாள் ஃபெனியா.

கனவு கலைக்கப்பட்டதும், விழித்ததும், தன் முன்னால் தோன்றிய ஃபெனியாவின் ராட்சத முகமும் தலைவனை வெறி கொள்ளச் செய்துவிட்டன. கோபத்துடன், ''உன் கைகளை என் தோளிலிருந்து எடு. போய் யந்திரத்தை நிறுத்தாமல் அரைத்துக் கொண்டிருங்கள். ம்.... போ!'' என்று கர்ஜித்துவிட்டு மறுபடியும் தூங்கலானான். கல் யந்திரத்தின் ஓசை இனிய தாலாட்டாக அவனை உறக்கத்தில் ஆழ்த்தியது.

தலைவன் மட்டும்தானா? கப்பலிலிருந்த அத்தனை பேருமே அந்த இனிய ஒலியினால் மயங்கித் தூங்கினார்கள். கப்பலை ஓட்டுபவனும்கூடத் தூங்கிக் கொண்டே சுக்கானை இயக்கினான்.


உப்பு உற்பத்தியாகிக் குவியலாயிற்று. மேலே மேலே அதன் குவியல் உயரலாயிற்று. கீழ் வானம் செவ்வரி கண்டபோது கடல் நீர் கப்பலின் விளிம்புக்கு வந்துவிட்டது. உப்பின் கனம் தாங்காமல் கப்பல் நீருக்குள் அமிழ்ந்துகொண்டிருந்தது. இப்போதும் யாரும் எழுந்திருக்கவில்லை. அந்த அடிமைப் பெண்களைக் கல் யந்திரத்தில் அரைப்பதை யாரும் நிறுத்தச் சொல்லவுமில்லை. அடுத்த விநாடி கப்பல் சலனமின்றி ஆழ்கடலின் அடிக்கு அமிழ்ந்தது. ஆனால் அப்போதும் கல் யந்திரம் சுழன்று கொண்டேதான் இருந்தது. 'போதும் நிறுத்துங்கள்' என்று யாரும் அவர்களிடம் சொல்லவில்லையே? அன்று முதல் இன்னமும்கூட கடலின் அடியிலே ஃபெனியாவும் மெனியாவும் கல் யந்திரத்தை இயக்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள். உப்பும் உற்பத்தியாகிக் கொண்டேதான் இருக்கிறது. இப்போது புரிகிறதா, கடல் நீர் ஏன் உவர்ப்பாயிருக்கிறதென்று? — விகே




ரயிலில் பிரயாணம் செய்யாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். நமது நாட்டில் முதலில் ரயில் ஓட ஆரம்பித்து நூறு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. அந்த முதல் ரயில் என்ஜினை இன்னும் வைத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் முதன் முதலில் ரயில் ஓடிய இடம் பம்பாய். பம்பாயில் போர்பந்தர் என்னுமிடத்திலிருந்து 'தாணா' வரை ரயில் ஓடுவதற்கான இருப்புப்பாதையை அமைக்கத் திட்டமிட்டார்கள். 1850 அக்டோபர் 31-ந் தேதி இதற்கான வேலை தொடங்கப்பட்டது. 21 மைல் நீளத்துக்கு ரயில் பாதை அமைக்க சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பாடுபட்டார்கள். 1853-ம் ஆண்டு ஏப்ரல் 16ந் தேதி அன்று போர்பந்தருக்கும் தாணாவுக்கும் இடையே முதல் ரயில் ஓடியது. 14 பெட்டிகள் இணைக்கப்பட்ட அந்த ரயில் வண்டியில் 400 பேர்கள் பிரயாணம் செய்தார்களாம். ஆனால், இன்று ரயில்வேயின் தூரம் சுமார் 59000 கிலோ மீட்டர் ஆகும். பதினைந்து லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றும் இந்திய ரயில்வேயில் சுமார் ஏழாயிரம் ரயில் நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் சுமார் 50 லட்சம் பிரயாணிகளுக்கு மேல் பிரயாணம் செய்கிறார்கள். ஆசியாவிலேயே பெரியதும், உலகிலேயே இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது நமது ரயில்வே.

— பொன்மலை பரிமளம்


சிரிக்கச் சிரிக்க
NO HORN
டேய், இதோ பாருடா, எவ்வளவு அழகான படம்? இதைப் போய் யாரோ தப்புன்னு அடித்திருக்கானே....!
—வாக்கர்
ஒரு சர்டிபிகேட் எழுதிக் குடுங்க சார்.
எதற்கு சர்டிபிகேட்?
இன்னும் போன மாதச் சம்பளமே கொடுக்கலே என்பதற்கு.
—வி.ரவீந்திரன்
உனக்குக் காப்பி குடிக்கும் பழக்கம் உண்டா?
எனக்குக் காப்பி அடிக்கும் பழக்கம் தான் உண்டு.
பாசி ஏன் வழுக்குகிறது?
நாம் அதில் கால் வைப்பதால்.
என் அம்மா இறந்ததற்காக எப்படி அழுகிறாய்? என் தாய் மீதுதான் உனக்கு எத்தனை அன்பு?
அன்பினாலில்லே. இனி வீட்டு வேலைகளையெல்லாம் நானே செய்தாக வேண்டுமே என்றுதான் அழுகிறேன்.
இந்தச் சிறிய வெள்ளிக் கோப்பை உனக்கு எதற்குப் பரிசாகக் கிடைத்தது?
நான் பாடியதற்காக..
அந்தப் பெரிய தங்கக் கோப்பை?
பாடியதை நிறுத்தியதற்காக.



ராஜபாட்டையான நாடு!

கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் அன்று பொழுது போகவில்லை. ஏதோ நினைத்துக் கொண்டார்கள். தோட்டத்தில் இருந்த குப்பை செத்தைகளையெல்லாம் கூட்டித் திரட்டினாள் பட்டு. அதற்குத் தீ வைத்தான் கிட்டு. திகுதிகுவென்று எரியும் அதில் அங்கும் இங்கும் ஒடிச் சுள்ளி, குச்சி ஆகியவைகளைக் கொண்டு வந்து போட்டு அந்தச் சொக்கப்பனை அணைந்து போகாமல் மேலும் மேலும் பெரிதாக எரியும்படி செய்து கொண்டிருந்தார்கள், அண்ணனும் தங்கையும். அப்போது அங்கே வந்தார் பரமேசுவரத் தாத்தா.

''என்ன கிட்டு, கார்த்திகை மாதம் அல்லவா இப்படிக் கொளுத்தி இதில் குங்கிலியம் போடுவார்கள். இது ஆவணி மாதம்தானே ?'' என்றவர் துண்டை உதறித் திண்ணையில் போட்டு அதன் மீது உட்கார்ந்து கொண்டார்.

''செப்டம்பர் மாதம் 14ந் தேதி யன்று இம்மாதிரி ஓர் ஊரில் ஒவ்வொரு வீட்டின் மொட்டை மாடியிலும் ஏன் நாடு முழுதுமே கணப்புக் கொளுத்திக் கொண்டாடுவார்கள். அதற்கு பான் ஃபயர் என்று பெயர். அது எந்த நாட்டில் தெரியுமா?'' என்று வினவைப் போட்டார்.

''பொழுது போகவில்லை எங்களுக்கு. ஏதோ தோன்றியது இப்படிக் குப்பை செத்தைகளைப் போட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தோம், தாத்தா. நீங்கள் வந்துவிட்டீர்களே. எந்த நாட்டுக்குக் கிளம்பப் போகிறோம்?'' என்று எரிந்து கொண்டிருந்த நெருப்பின் மீது மண்ணை அள்ளிப் போட்டு அணைத்துவிட்டு அவர் அருகில் வந்தார்கள்.

''எந்த ஊருக்கும் போக வேண்டாம். கால் வருஷப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறது இல்லையா ? இப்படி உட்காருங்கள். எங்கும் போகாமலேயே இங்கிருந்தபடி உங்களுக்கு ஒரு நாட்டைப் பற்றிய ரசமான தகவல்களைக் கூறுகிறேன்'' என்றார் பரமேசுவரத் தாத்தா. கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் அன்னிய நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளுவதில் எப்போதுமே அலாதியான ஆவல். ''ஊர் முழுதும் பான்ஃபயர் கொளுத்திக் கொண்டாடும் நாடு எது? அதைச் சொல்லுங்கள்'' என்றனர் கிட்டுவும் பட்டுவும்.

'' ஆசியாவின் மேற்குக் கோடியில் இருக்கிறது ஒரு நாடு. மத்தியதரைக் கடற்கரையை ஒட்டியுள்ள நாடு. உயர்ந்த மலைகளைக் கொண்ட நாடு. அதன் மேற்கு எல்லை முழுதுமே கடற்கரைதான். அதுவும் நூற்று நாற்பது மைல்கள் நீளம்தான். ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் செல்லும் ராஜபாட்டையாக விளங்கியது ஒரு காலத்தில். இந்த நாட்டின் கடற்கரைச் சமவெளியில் பல சாம்ராஜ்யங்களின் படைகள் மோதிக் கொண்டு சரித்திரத்தை உருவாக்கியிருக்கின்றன. எகிப்தியர்கள், அஸிரியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், அராபியர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள், குருசேடர்கள், பிரஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் இத்தனை பேரும் இந்த நாட்டின் சமவெளியில் சந்தித்துப் போரிட்டுச் சமாதானம் பேசி வாழ்ந்து அழிந்திருக்கிறார்கள். இத்தனை பெருமைக்குரிய நாடு எது தெரியுமா?''

''அப்பா! இவ்வளவுதானா? இன்னும் இருக்கிறதா?'' என்றாள் பட்டு.

'' இதற்குப் பதில் சொல்லுங்கள். இன்னும் நிறையச் சொல்லுகிறேன்'' என்றார் தாத்தா.

''மத்தியதரைக் கடல், ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் ராஜபாட்டை. சின்னஞ் சிறிய நாடு. ஆகவே இது ஒரு காலத்தில் ஒட்டோமான் சாம்ராஜ்யம் என்று வழங்கப்பட்ட தேசமாகத்தான் இருக்க வேண்டும். முதல் மகாயுத்தத்


துக்குப் பிறகு சிரியா, லெபனான், ஜோர்டான் என்று பிரிந்த பகுதிகளில் நீங்கள் குறிப்பிடும் சொக்கப்பனைத் திருவிழா நாடு எது என்றுதான் தெரியவில்லை'' என்றான் கிட்டு.

பரமேசுவரத் தாத்தா பிரமித்துப் போய் விட்டார், கிட்டுவின் பூகோள அறிவைக் கண்டு, ''பலே, பலே! பூகோளத்தில் நீ இவ்வளவு 'அப்டுடேட்டாக' இருக்கிறாயே. ஆச்சரியம்தான். நான் குறிப்பிட்டது லெபனான் நாட்டைத்தான். அங்குதான் செப்டம்பர் 14ந் தேதியன்று நாடு முழுதும் சொக்கப்பனை கொளுத்தி ஒரு விழாக் கொண்டாடுகிறார்கள். அந்த நாட்டின் வீடுகள் சம தளமான மேல்தளத்தைக் கொண்டிருக்கும். நாம் கார்த்திகைப் பண்டிகையின் போது தீபாலங்காரம் செய்கிறோமே, அகல் விளக்கு வைத்து அதே மாதிரி வீடுகளின் மொட்டை மாடிகளில் பான்ஃபயர் எரிய விடுகிறார்கள். மாதாகோயில்களின் கூரைகளில் மெழுகுவத்திகளைக் கொளுத்தி வைக்கிறார்கள். தோட்டங்களிலும், மாதா கோயில்களின் முன்னாலுள்ள பரந்த இடத்திலும் சொக்கப்பனை கொளுத்துகிறார்கள். மலைகளின் உச்சிகளிலெல்லாம்கூட இப்படித் தீமூட்டிக் கொழுந்து விட்டெரியச் செய்கிறார்கள், அண்ணாமலைத் தீபம் போல். லெபனான் நாட்டவரைக் கேட்டீர்களானால், கார்த்திகைத் தீபத்துக்கு நீங்கள் மகாபலிச் சக்கரவர்த்தியின் கதையைச் சொல்லுவதுபோல் அவர்களும் ஒரு கதையைக் கூறுகிறார்கள்'' என்றார்.

''அந்தக் கதை உங்களுக்குத் தெரிந்திருக்குமே. அதை எங்களுக்குச் சொல்லுங்கள்'' என்றாள் பட்டு.


''செப்டம்பர் 14ந் தேதியைச் சிலுவைக் குறி நாள் (Sign of the cross day) என்கிறார்கள் லெபனான்காரர்கள். 1640 வருஷங்களுக்கு முன்னாலே ஹெலனா என்ற கிறிஸ்துவப் பெண் ஜெருசலத்துக்குப் போனாள். அங்கே ஏசுபிரானைச் சிலுவையில் அடித்தார்களே, அந்தச் சிலுவையை அவள் கண்டாள். ஹெலனாவின் மகன்தான் மகா மகா கான்ஸ்டான்டைன் என்று அழைக்கப்பட்ட மன்னன். இவன் ஐரோப்பாவும் ஆசியாவும் கூடுமிடத்தில் ஒரு புதிய நகரத்தை நிர்மாணித்துக் கொண்டிருந்தான். அதுதான் கான்ஸ்டாண்டிநோபிள். இன்றைய இஸ்தான்புல். தான் கண்டுபிடித்த நிஜமான சிலுவையைப் பற்றிய செய்தியைத் தன் மகனுக்கு எத்தனை விரைவில் தெரிவிக்க முடியுமோ, அத்தனை விரைவில் தெரிவிக்கத் துடித்தாள் ஹெலனா. கப்பலிலோ, அல்லது குதிரையின் மீதோ இதை அனுப்புவதானால் ஜெருஸலத்திலிருந்து கான்ஸ்டாண்டிநோபிள் போகப் பல நாட்களாகும். ஆகவே தன் செய்தியை பான்ஃபயர் மூலம் அனுப்ப முடிவு செய்தாள். மலைஉச்சிகளில் மனிதர்கள் தீமூட்டினார்கள். பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள மற்றொரு மலையின் மீது உள்ளவன் இந்த ஒளியைக் கண்டு அங்கு தீமூட்டினான். இப்படியே செய்தி பறந்தது. இதை நினைவுபடுத்தத்தான் இன்று லெபனான் நாட்டிலுள்ள குழந்தைகள் காய்ந்த இலை தழைகுச்சிகளைக் குவித்துத் தீ மூட்டிச் சிலுவைக் குறி இரவு விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

''இப்படித் தன் செய்தியை பான்ஃபயர் மூலம் அனுப்பிய பிறகு ஆசியாவின் இந்தப் பகுதி முழுவதையும் முஸ்லிம்கள் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். ஐரோப்பாவிலிருந்து



தங்கள் புனித இடங்களை மீட்பதற்காகக் கிறிஸ்துவ மன்னர்கள் பெரும் படையுடன் கிளம்பி வந்தார்கள். இவர்களுக்குக் குருஸேடர்கள் என்று பெயர். ஆனால் இவர்களால் ஜெருஸலத்தை மீட்க முடியவில்லை. லெபனானில் தங்கிப் போரிட்ட அவர்கள் இங்கு பெரிய பெரிய கோட்டைகளைக் கட்டினார்கள். இன்றும் யாத்திரீகர்கள் இந்தக் கோட்டைகளைக் காண வருகிறார்கள். இங்கு லெபனானின் அண்டை நாடுகளான சிரியா, பாலஸ்தீனம், ஜோர்டான் ஆகிய நாடுகளைவிட இங்குதான் கிறிஸ்துவர்கள் அதிகம். லெபனானில் வாழும் மூன்று பேரில் ஒருவர், வளம் மிக்கதும் கலகலப்பு மிகுந்ததுமான கடற்கரை நகர் பெரூட்டில் வசிக்கிறார்கள்.''

''பெரூட் லெபனானின் தலைநகரும் கூட, இல்லையா?'' என்று நிச்சயப்படுத்திக் கொண்டான் கிட்டு. பெரூட் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையான நகரம். மத்தியதரைக்



கடலையொட்டிய பிரதான ராஜ பாட்டையில் உள்ளது இதன் மற்றொரு பெருமை. தவிர சிரியாவின் புகழ்பெற்ற தலைநகரான டமாஸ்கஸ் நகருக்கு இது தான் அருகிலுள்ள துறைமுக நகரம். லெபனானின் கிழக்கு எல்லையில் உள்ள உயர்ந்த மலைகளை அடுத்துப் பாலைவனத்தின் விளிம்பில் டமாஸ்கஸ் நகரம் இருக்கிறது. ஆனாலும் டமாஸ்கஸ் நகரம் நிழல் தரும் மரங்களுக்கும் தோட்டங்களுக்கும் புகழ் பெற்றது. காரணம் லெபனான் மலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகள் இந்த நகரைச் செழிப்பாக்கி விட்டுத்தான் பிறகு பாலைவனத்தில் தங்கள் நீரைப் பறி கொடுக்கின்றன.

லெபனானின் சில மலைச் சிகரங்கள் 10,000 அடி வரையில் உயரமுடையவை. மாரிக் காலத்தில் இவை பனி மூடிக் கிடக்கும். லெபனான் என்றால் வெண்மை என்று பொருள். கடலிலிருந்து பார்த்தால் இதன் மலைகள் பனி மூடி வெண்மையாகத் தெரிவதினால் தான் இதற்கு இந்தப் பெயர் வந்தது என்பார்கள் சிலர். வேறு சிலர் இந்நாட்டின் மலைகள் சுண்ணாம்புக் கற்களால் ஆனவை. இம்மலையின் பகுதிகளில் எங்கு அத்திமரக் காடுகளாலும் திராட்சைத் தோட்டங்களாலும் மூடப்படாமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் சூரிய ஒளி பட்டுக் கோடையில் டாலடிக்கும். இதனால்தான் இதற்கு லெபனான் என்று பெயர் ஏற்பட்டது என்பார்கள்.

லெபனான் மலைகள் ஒரு காலத்தில் ஸெடார் மரங்களுக்குப் பிரபலமாக விளங்கின. ஆனால் இன்று ஒருசில பகுதிகளில்தான் இந்தப் புகழ்பெற்ற ஸெடார் மரக் காடுகள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக மனிதர்கள் இம் மரங்களை வெட்டியதும் இள மரங்களை மலை ஆடுகள் அழித்ததுமே இங்கு ஸெடார் குறைந்ததற்குக் காரணம்.

''இந்த நாட்டின் விசேஷம் இன்னும் ஏதாவது உண்டா தாத்தா?'' என்று கேட்டான் கிட்டு.

''லெபனானில் வெள்ளாடுகள் ஏராளம். 5,00,000 வெள்ளாடுகள் இருக்கின்றன இங்கு. செம்மறி ஆடுகளுக்கும் பஞ்சமில்லை. 75,000 செம்மறியாடுகள். கால்நடைகள் 70,000 கழுதைகள், 20,000, பன்றிகள் 2000 குதிரைகள் 3000; ஒட்டகங்கள் 1,400 இருக்கின்றன.

''அடுத்த வருஷம் அங்கு 'சைன் ஆல்ப் தி கிராஸ்' தினத்துக்குப் போகலாம். போய்ப் பரீட்சைக்கான பாடங்களைப் படியுங்கள்'' என்று இருவரையும் படிக்க முடுக்கிவிட்டுக் கோயிலுக்குக் கிளம்பினார் தாத்தா.

இதோ வருகிறேன்!

வெண்ணிலாவே வெண்ணிலாவே
எங்கே போகிறாய்?
உன்னுடன்நான் கூடவர
ஆசை கொள்கிறேன்.

உலகமெலாம் சுற்றிவர
நானும் போகிறேன்
உலகமெலாம் சுற்றிவர
உன்னால் முடியுமா?

விண்ணிலேறித் தொட்டுவிட்டோம்
உன்னை நாங்களே — அதை
எண்ணிடாமல் கேட்கலாமோ
இந்தக் கேள்வியை !

இன்னும் என்ன தயக்கம்நீயும்
சொல்லு வெண்ணிலா.
உன்னுடன்நான் உலகைச் சுற்ற
இதோ வருகிறேன்!

— ரத்னம்





கடவுளாக வணங்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்

— விகேயெம்

"அந்தத் தரிசு நிலத்திலே ஒரு பயங்கரமான உருவம் நடந்து போயிற்று. அதைச் சுற்றி பஞ்சளான தீப் பிழம்பு திகுதிகுவென்று எரிந்து கொண்டிருந்தது. கறுப்பான அவ்வுருவத்தின் உடலிலிருந்து திடீர்திடீரென்று நெருப்பு குப் குப்பென்று வெளிவந்து எரிகிறது.'' இப்படி ஒருவன் மூச்சு வாங்கத் தன்னைச் சூழ்ந்திருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான். எங்கே, எப்போது? இங்கிலாந்திலுள்ள கார்ன்வால் மாகாணத்தின் ரெட்ரூத் என்ற ஊரிலுள்ள ஓர் உணவு விடுதியில். சதுப்பு நிலமும் தரிசுப் புதர்களும் நிறைந்த பகுதியில் சற்று முன்புதான் கண்டதைக் கொள்ளிவாய்ப் பிசாசு என்று உருவகப்படுத்திக் கொண்டிருந்தான் அவன். சிலர் சிரித்தார்கள். பலர் மௌனமாகப் பீதி கலந்த பார்வையுடன் ஆமோதித்துத் தலையை ஆட்டினார்கள்.

''பேயாவது, பிசாசாவது, சுத்தப் பைத்தியக்காரத்தனம். அப்படி எதுவும் கிடையாது. இது அந்த ஸ்காட்லாந்துக்கார **வில்லியம் மூர்டாக்கின்** வேடிக்கைகளில் ஒன்றாக இருக்கும்'' என்றார் ஒரு பண்ணையார். அவருடைய நண்பர்களும் அதுதான் உண்மை என்று ஆமோதித்தார்கள். தகரச் சுரங்கங்களில் தேங்கி நிற்கும் நீரை இரைப்பதற்கான நீராவி யந்திரங்களை விற்பனை செய்வதற்காக அங்கு வந்திருந்தார் ஒரு வாலிப ஸ்காட்லாந்துக்காரர். அவர் பெயர் வில்லியம் மூர்டாக். அவர் பல சாகஸங்களைச் செய்வதில் வல்லவராக விளங்கினார். ஆகவே அந்தப் பண்ணையாரின் பேச்சில் உண்மை இருக்கலாம் என்றும் கருதினார்கள்.

வில்லியம் மூர்டாக் 1754ம் ஆண்டு அயர்ஷயரிலுள்ள பெல்லோமில் என்னுமிடத்தில் பிறந்தார். சின்னப் பையனாக இருக்கும் போதே அவர் வயதுப் பையன்கள் விளையாடிப் பொழுதைக் கழிக்கும் போது இவர் ஏதாவது சோதனைகளும் ஆராய்ச்சிகளும் செய்து கொண்டிருப்பார்.

ஒரு நாள் வீட்டில் சமையல் அறையில் பொழுது போகாமல் உட்கார்ந்திருந்தார். அடுப்பு நெருப்பை அவிப்பதற்கு நிலக்கரித் தூளை எரியும் ஜ்வாலையின்

மீது போட்டுக் கொண்டிருந்தார்கள். அவருடைய கற்பனை தானோ அல்லது அந்த நிலக்கரித் தூள் சூடானதும் இயற்கையாகவே பிரகாசமாகச் சுடர் விட்டு எரிந்ததோ தெரியாது. அந்தக் காட்சி அவரது சிந்தனையைக் கிளறியது. 'நிலக்கரித் தூளை ஒரு பாத்திரத்தில் போட்டுக் காய்ச்சுவதினால் வெளிப்படும் ஜ்வாலையை ஏதாவது ஓர் உபாயத்தினால் ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்துக்குக் கொண்டுபோய் எரியவிட முடியுமா?' செய்து பார்த்துவிடத் துடித்தது அந்தப் பிஞ்சு நெஞ்சம். பரபரவென்று சுற்றுமுற்றும் தேடினார். நிலக்கரித் தூளை வைத்துக் காய்ச்சுவதற்கு ஏற்ற பாத்திரத்தை. சட்டென்று அவர் கண்ணில் பட்டது தேநீர் தயாரிக்கப் பயன்படும் கெட்டில்தான்.

முர்டாக் கெட்டிலில் நிலக்கரித் தூளை நிரப்பி அதை அடுப்பின் மீது வைத்தார். கொஞ்ச நேரத்தில் கெட்டில் மூக்கு வழியாக மஞ்சளாகப் புகை வெளிப்பட்டது. மகிழ்ச்சி கொண்ட முர்டாக், அடுப்பிலிருந்து ஓர் எரியும் குச்சியை அந்தப் புகையின் நடுவில் நீட்டினார். புகை குப்பென்று தீப் பிடித்துச் சுவாலை விட்டு எரிந்தது. முர்டாக்குக்கு வியப்பான வியப்பு — உலகம் வாயு விளக்கைக் கண்டுவிட்டது.

எல்லா வாலிப ஸ்காட்லாந்துக்காரர்களையும் போலப் புகழையும் பொருளையும் தேடி முர்டாக்கும் இங்கிலாந்துக்கு வந்தார். அப்போது விஞ்ஞானத்தில் நாட்டமுடைய இளைஞர்களைக் காந்தம் போல் வசீகரித்து இழுத்த இடம் பர்மிங்ஹாமிலுள்ள சோகோ என்ற ஊரில் இருந்த பௌல்டன் அண் வாட் என்ற தொழிற்சாலைதான். இங்குதான் நீராவி யந்திரம் கண்ட ஜேம்ஸ் வாட்டும் அவருடைய கூட்டாளியான மாத்யூ போல்டனும் தங்களுடைய நீராவி யந்திரங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

வாரத்துக்குப் பதினைந்து ஷில்லிங்குகள் சம்பளத்தில் முர்டாக்குக்கு இந்தத் தொழிற்சாலையில் ஒரு வேலை கிடைத்தது. இரண்டு ஆண்டுகள் பயிற்சிக்குப் பிறகு முர்டாக் கார்ன்வாலுக்கு அனுப்பப்பட்டார். அங்குள்ள சுரங்கத் தொழிற்சாலை அதிபர்களிடம் நீராவி பம்பு செட்டுகளை விற்பதும் வாங்கியவர்களின் இயந்திரங்களை மேற்பார்வையிடவும்தான் முர்டாக்கின் வேலை. வாரம் ஒரு பவுன் அடிப்படைச் சம்பளம்.

கார்ன்வாலிலுள்ள எல்லாச் சுரங்கங்களுமே வெள்ளக்காடாக விளங்கின. ஆகவே ஒவ்வொரு சுரங்க முதலாளியும் போல்டன் அண்ட் வாட் நீராவி யந்திரத்தை அமைத்துக் கொண்டார்கள், தண்ணீரை இறைத்து வெளியேற்ற. முர்டாக்கின் மேற்பார்வையில் இயங்கிய இவ் வியந்திரங்கள் அதிகத் தொல்லை தரவில்லை. முர்டாக்குக்குத் தன்னுடைய சொந்த சோதனைகளைச் செய்ய நிறைய அவகாசம் இருந்தது.

சின்ன வயசில் நிலக்கரித் தூளிலிருந்து வாயு வடித்ததை இப்போது சிறப்பாகவும் முறையாகவும் தயாரித்தார். கன்றுக்குட்டியின் இரு தோல்களை இணைத்து ஒரு பை தயாரித்தார். இணைப்புத் தையல்களை இடைவெளி இல்லாமல் கில் தடவி உறுதிப்படுத்தினார். இதன் மேல் பக்கத்தில் நீண்ட இரும்புக் குழாயை இணைத்தார். இதன் மூலம் நிலக்கரி வாயுவை உள்ளே செலுத்தி நிரப்பித் தக்கை கொண்டு குழாயை மூடினார். தரிசு நிலப்பகுதிகளில் இரவு வேலைகளில் போகும்படி இருந்தது. அப்போது வெளிச்சத்துக்கும் வழி தெரியவும் தோல் பையில் சேமித்து வைத்துள்ள நிலக்கரி வாயுவை வெளியிட்டு அதைக் கொளுத்தி எரியச் செய்வார். ரெட்ரூத் வாசிகள் இரவு வேளைகளில் தரிசு நிலத்தில் கண்ட கொள்ளிவாய்ப் பிசாசு முர்டாக்கின் இந்த எரிவாயுதான்.

முர்டாக்கின் ஆராய்ச்சிகளுக்கு முடிவேயில்லை. அந்தக் காலத்து நீராவி யந்திரங்களில் மிகப் பெரிய பாய்லர்களும் பிஸ்டன்களும் இருந்தன. இந்த அமைப்பை மாற்றியமைக்க எண்ணினார். அதுமட்டுமல்ல. நீராவி யந்திரத்தினால் வண்டியின் சக்கரங்களைச் சுழற்றி ஓட வைக்க முயன்றார். இது சாதாரண விஷயமில்லையே. ஆனால் விடாமுயற்சியுடைய முர்டாக் இதிலும் வெற்றியே கண்டார். ரெட்ரூத் நகரின் நெடுஞ்சாலையில் அவருடைய புதிய யந்திரம் ஏகமாக ஒலிகளை உண்டாக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது. முர்டாக்கை விட வேகமாக. புகையைக் கக்கியபடி பெரிய ராட்சத மிருகத்தைப் போல் 'புஸ்புஸ்' என்று சீறிக்கொண்டு ஒரு புதிய யந்திரம் வீதியில் நகர்வதைக் கண்ட கிராமத்தார்கள் பீதியடைந்து இங்குமங்கும் ஓடலானார்கள்.

இத்தனைக்கும் கார்ன்விஷ்வாசிகள் முர்டாக்கிடம் அன்பும் ஆதரவும் காட்டினார்கள். அவருடைய செயல்களை ரசித்து மகிழ்ந்தார்கள். முர்டாக் அந்த ஊர்ப் பெண் ஒருத்தியையே மணந்து கொண்டார். ரெட்ரூத்திலுள்ள க்ராஸ் தெருவில் ஓர் அழகிய சின்ன வீட்டில் குடியேறினார். அந்த வீட்டில் வீதியைப் பார்த்தபடி ஒரு பெரிய ஜன்னல்.

வீதியில் போவோர் முர்டாக்கின் வீட்டு அறைகளைப் பிரகாசமான மஞ்சள் ஒளி விளக்குகள் அலங்கரித்திருப்பதைக் கண்டார்கள். அந்த ஒளியைத் தரும் விளக்குகள் அறையின் சுவர்களிலுள்ள குழாய் மூலம் எரிவதையும் கண்டு வியந்தார்கள். உலகின் முதல் செயற்கை வாயு விளக்கைத்தான் தாங்கள் பார்க்கிறோம் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது. அது 1792ம் ஆண்டு.

தன் வீட்டு வரையில் இத்தகைய வாயு விளக்கை முர்டாக் பயன்படுத்தினாலும் முர்டாக்கிற்குத் திருப்தி ஏற்படும்படி அது அமைய இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று. திடீரென்று அணைந்துவிடும். சிலவேளைகளில் வாயுக் குழாய் வெடித்துச் சில்லறை அபாயங்களை உண்டாக்கும். அதைத் தொடர்ந்து தாங்க முடியாத துர்நாற்றமும் அந்த அறையில் பிறகு யாரும் வசிக்கமுடியாதபடிக்கு அசௌகரியமும் ஏற்பட்டன. இவைகளையெல்லாம் சரிசெய்து நிலக்கரி வாயுவிளக்கைக் குற்ற இல்லாததாக்க முர்டாக்கின் ஊழியர்கள் அவருக்கு ஒத்துழைப்புத் தர மறுத்து விட்டார்கள். ஆகவே அவர் தம் வேலையை விட்டு விட்டு ஸ்காட்லாந்துக்கே திரும்பும்படியாயிற்று.

1798ல் பர்மிங்ஹாம் தொழிற்சாலையின் மானேஜராகப் பதவி ஏற்க வரும்படி அவர் மறுபடியும் வற்புறுத்தப்பட்டார். முர்டாக்கின் மேற்பார்வையில் அங்கு வாயு உற்பத்தி செய்யும் விசேஷ அமைப்பை நிறுவினார்கள். மற்றத் தொழிற்சாலைகளை விட இத்தொழிற்சாலையில் அதிக நேரம் வேலை செய்ய வழி வகுத்துக் கொடுத்தார் முர்டாக். எப்படி? மாரிக்காலத்தில் முர்டாக்கின் வாயு விளக்குகள் இருளை விரட்டி ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன.

1802ல் தொழிற்சாலையின் நுழைவாயிலைத் தமது வாயு விளக்குகளைக் கொண்டு அலங்கரித்தார். பொது ஜனங்கள் முதன் முதலாகப் புதிய விளக்கின் அற்புதங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இதன் பிறகு மற்றத் தொழிற்சாலைகளும் வாயு உற்பத்தி செய்யும் சாதனங்களை அமைத்துக் கொண்டன. அது மட்டுமா? நிலக்கரி வாயு தயாரிக்கும் நிறுவனங்கள் ஏற்பட்டு வீதி வழியே குழாய்கள் மூலம் எரிவாயுவை விநியோகிக்க முற்பட்டன. சொந்த வீட்டுக்காரர்களும் தங்கள் வீடுகளில் வெளிச்சம் போட இதை வாங்கிக் கொண்டார்கள். இன்றைக்கு மின்சாரம் எப்படிப் புழக்கத்தில் உள்ளதோ, அப்படி அன்று நிலக்கரி வாயுவை விநியோகம் செய்தார்கள்.

இப்படி வீடுகளில் விளக்கேற்றி வைத்த முர்டாக் தமது கண்டுபிடிப்பினால் நேரடியாகப் பெரும் லாபம் பெற்றுவிடவில்லை. தம் கண்டுபிடிப்பை உரிமைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இல்லை இவர். மற்றவர்கள் இவரது முறையைப் பின்பற்றித் தொழில் நடத்தினார்கள். முர்டாக் இரு வகைகளில் கௌரவிக்கப்பட்டார். விஞ்ஞானி, கண்டுபிடிப்பாளர் என்ற வகையில் ராயல் கழகம் இவருக்குத் தங்கப் பதக்கம் அளித்தது. இரண்டாவது கௌரவம் இவர் காலமான பிறகு கிடைத்தது. ஹாஸ்ய ரசனை மிக்க இவருக்குக் கிடைத்த மிகப் பொருத்தமான பாராட்டு அது.

1873ல் பாரசீக மன்னரான ஷா லண்டனுக்கு விஜயம் செய்தார். புகை வண்டிகளோ, தொழிற்சாலைகளோ அவரைக் கவரவில்லை. இரவு வேளைகளில் ஒளி மயமாக விளங்கும் தெருக்களின் அழகு அவரைக் கவர்ந்தது. பெரிய மாளிகைகளுக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள சர விளக்குகளைக் கண்டு வியந்தார். அந்த விளக்குகளெல்லாம் முர்டாக் கண்டுபிடித்த எரிவாயுவின் மூலம் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன.

''இரவைப் பகலாக்கும்படியான இந்த விளக்குகளைக் கண்டுபிடித்த மந்திரவாதி யார்?'' என்று கேட்டார் ஷா.

''நிலக்கரி வாயுவுக்குக் கடிவாளமிட்டுத் தன் இச்சைப்படி செயல்பட வைத்த அந்த மனிதரின் பெயர் முர்டாக். அவர் இறந்து போய்ப் பல வருடங்கள் ஆகின்றன'' என்றனர்.

சிந்தனையோடு ஷா தலையசைத்தபடியே கூறினார்: ''எங்கள் நாட்டில் விளக்குக்கான புராதன தேவதையின் பெயரும் மெர்டாக்தான். நீங்கள் கூறும் இந்த முர்டாக் எங்கள் மெர்டாக்கின் மறு அவதாரமாகத்தான் இருக்க வேண்டும்.'' என்றவர், தன் நாடு திரும்பியதும் பாரசீகத்திலுள்ள தமது அரண்மனையிலும் ஆலயங்களிலும் வில்லியம் முர்டாக்கின் உருவப் படத்தைத் தொங்க விட்டார். சமீபகாலம் வரைகூடப் பாரசீகத்தின் மேற்குப் பகுதியில் முர்டாக்கைத் தேவனாகக் கருதி வழிபட்ட தங்கள் மூதாதையர்களின் வழி வந்தவர்களாக ஓர் இனத்தவர் இருந்து வந்தார்கள் என்றால் இது முர்டாக்குக்குக் கிடைத்த மகத்தான கௌரவமில்லையா?

இன்றும்கூட மேலை நாடுகளில் நிலக்கரி வாயுவினால் எரியும் விளக்குகள் பல ஊர்களில் இருக்கின்றன.

தெரியுமா?

754. எந்தத் தென் ஆப்பிரிக்க நாடு தன் வடக்கு எல்லையில் வெனிஸுவேலாவையும் தெற்கு எல்லையில் ஈக்வடாரையும் கொண்டுள்ளது?

755. உலகில் உள்ள மொத்த இயற்கை மூலப் பொருள்கள் எத்தனை என்று தெரியுமா?

756. டியாடம்ஸ் (Diatoms) என்றால் தெரியுமா? இவைகளை எங்கு காணலாம்?

757. CH என்ற வாயுவின் ரசாயனப் பெயர் என்ன?

758. இந்தியாவின் கடைசி ஆங்கிலேய கவர்னர்-ஜெனரல் மௌன்ட் பாட்டன் என்று தெரியும் உங்களுக்கு. முதல் கவர்னர் ஜெனரல் யார்?

759. இங்கிலாந்தை ஆண்ட டியூடர் வமிசத்து அரசர்களில் முதல்வர் யார்?

760. அடிகி (Adige) அர்னோ (Arno) வோல்டர்னோ (Volturno) ஆகிய நதிகள் எந்த நாட்டில் உள்ளவை?

761. ப்ரோகென் (Brocken) என்றால் என்ன? எங்குள்ளது?

762. தற்போது நாம் புழக்கத்தில் பயன்படுத்தும் நிறுத்தலளவை முகத்தலளவைகளின் முறைக்கு என்ன பெயர்?

763. மான்களிலேயே மிகச் சிறியது கஸ்தூரி மான்கள். இவை எங்கே வாழ்கின்றன என்று தெரியுமா?

764. தாவரத்தில் ஒரு பகுதிக்கு, 'ஸ்டோமடா' (Stomata) என்று பெயர் அது எது?

765. எகிப்திய இதிகாசத்தில் இஸிஸ் (Isis) என்ற பெயர் யாரைக் குறிக்கிறது தெரியுமா?

766. லெபனான் நாட்டின் தலைநகர் எது?

767. மெலனேஷியாத் தீவுகள் எந்தக் கடலில் இருக்கின்றன?

768. வங்காள விரிகுடாவின் கடற்கரைப் பகுதிக்கு என்ன பெயர்?

769. நெப்போலியன் பிரெஞ்சுக்காரரா?

770. ஒரு பிரபல ரோமானிய சக்கரவர்த்தி தன்னுடைய தாயாரையே கொன்றவர். அவர் யார்?

771. ஏசு பிரானின் பன்னிரண்டு முக்கிய சீடர்களில் ஒருவரை ஸெலாட் (The Zealot) என்றழைப்பார்கள். அவர் பெயர் என்ன?

772. தி லாப், தி ட்ராப், தி ஷாட், தி ஸ்மாஷ் - இவைகள் எந்த விளையாட்டில் பயன்படும் பதங்கள்?

773. பருத்தி ஆடை உற்பத்திக்குப் புகழ்பெற்ற ஆங்கில மாகாணத்தின் பெயர் தெரியுமா?

774. விக்டோரியா மகாராணியார் மூன்றாவது வில்லியம் மன்னருக்குப் பின் 1837ல் சிங்காதனமேறினார் — இது சரியா, தவறா?

775. பெரிய அலகுடைய டூகான் (Toucan) என்ற பறவை மிகுதியாகக் காணப்படும் பகுதி எது தெரியுமா?

776. டெர்ஸெண்டினரி (Tercentenary) என்பது — ஒரு ரோமானிய அதிகாரியின் பெயர் — நூற்றாண்டில் மூன்றில் ஒரு பாகத்துக்கு — 3000 ஆண்டுக்கொரு முறை — 300வது ஆண்டு விழா — இவைகளில் எதைக் குறிக்கிறதென்று தெரியுமா?

777. ஜிப்ரால்டர் ஜலசந்திதான் உலகின் முடிவான எல்லை என்று நினைத்தார்கள் சில மக்கள். அவர்கள் யார்?

778. வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த ஆண்டு எது?

779. நார்த்தம்பர்லாந்துக்கு ஐந்து அண்டை மாகாணங்கள் உண்டு. அவைகளின் பெயரைக் கூறு.

754. கொலம்பியா. 755. 90தான். 756. மிக நுண்ணிய கடல்வாழ் தாவரங்களுக்கு இப் பெயர். 757. மெதேன் (Methane). 758. வாரன் ஹேஸ்டிங்ஸ். 759. ஏழாம் ஹென்றி. 760. இத்தாலியில். 761. ஜெர்மனியில் உள்ள ஹார்ஸ் மலையின் மிக உயரமான சிகரத்தின் பெயர் இது. 762. மெட்ரிக் முறைகள் என்று பெயர். 763. இமய மலையிலும், மத்திய ஆசியாவின் இமயமலைப் பகுதிகளிலும். 764. தாவரங்கள் சுவாசிக்கப் பயன்படும் துவாரங்களுக்கு இப்பெயர். 765. கடவுளர்களின் ராணியை. 766. பெருட். 767. பசிபிக் கடலில். 768. ஈஸ்ட்கோஸ்ட். 769. இல்லை, கார்ஸிகாக்காரர். 770. நேரோ. 771. ஸைமன். 772. லான் டென்னிஸில். 773. லங்காஷயர். 774. தவறு. மன்னர் நான்காவது வில்லியத்தின் மரணத்துக்குப் பிறகு விக்டோரியா அரசியானார். 775 அமேஸான் பள்ளத்தாக்கில். 776. ஒரு நிகழ்ச்சியின் 300வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் விழாவுக்கு. 777. பொனீஷியர்கள். 778. 1564. 779. பெர்விக்ஷயர், ராக்ஸ் பர்க்ஷயர், டம்பர்ப்ரீஸ் ஷயர், கம்பர்லாண்ட், டர்ஹாம்.

தெரியுமே!


ஸோலோ காதல் மலர்கிறது...
இன்பக் கடலில் திளைத்து மகிழ!
SOLO
ஸோலோ
உங்கள் இளமையின் துடிப்பு, காதல், ஆசைவெள்ளம், உங்கள் காதலுடன் கொஞ்சிக் குலவி, அள்ளி அருந்திட... ஸோலோ, துடிப்புள்ள எலுமிச்சை பானம்!
SOLO
ஸோலோ காதல் பானம்... இளம் உள்ளங்கள் கீதம்!
ADWAVE-KH-163-C

நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.
தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது—உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு
செலவில்
இருபங்கு
ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு - 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : சதாசிவம்